# இஸ்லாம் ஒரு நோக்கு

## ما هو الإسلام؟



اللغة التاميلية

ح المكتب التعاوني للدعوة والإرشـــاد وتوعيـــة الجاليات بالبديعة، ١٤٢٨هـ

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

المكتب التعاوني للدعوة والإرشاد بالمجمعة

ما هو الإسلام باللغة التاميلية. / المكتب التعاوني للدعوة والإرشاد بالمجمعة.-الرياض، ١٤٢٨هـ

٤٠ ص ، ١٢ × ١٧ سم

ردمك : ٢-٢-٩٩٩٧-٩٩٦٠-٩٧٨

١- الإسلام أ- العنوان

ديوي ٢١٠ ١٤٢٨/٦٣٤٤

رقم الإيداع : ١٤٢٨/٦٣٤٤

ردمك : ٢-٢-٩٩٩٧-٩٩٦٠-٩٧٨

# هذا الكتاب

اسم الكتاب: ما هو الإسلام ؟ اللغة: التاميلية

المؤلف: الدكتور محمد فضل الرحمن أنصاري

المترجم: المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالمجمعة

المراجع: لجنة الدعوة والتعليم بالمدينة المنورة

هذا الكتاب يتحدث مختصراً عن محاسن الإسلام مستدلاً بأقوال العلماء والمفكرين من الشرق والغرب، مطعماً بالأدلة من كتاب الله وصحيح كلام رسوله ﷺ،

## محتويات الكتاب


- إن الدين عند الله الإسلام
- تنظيم شؤون الحياة في الإسلام
- التوازن بين العقل والعلم والدين
- الإسلام والأخلاق
- نظام الأسرة في الإسلام
- القرآن هو الكتاب المقدس
- حكمة مشروعية الجهاد
- الدين يسر
- كلمة أخيرة
- الخاتمة

# ஓர் அழைப்பு

வாசக நெஞ்சங்களே ! எமது இஸ்லாமிய அழைப்புச் செயலகத்தால் வெளியிடப்படும் நூற்களை வாசித்துப் பயன்பெறத் தவறாதீர்கள். தமிழ் மொழி மூலம் இதுவரை வந்துள்ள எமது வெளியீடுகள் பின்வருமாறு :

1 – **இஸ்லாம் ஒரு நோக்கு**
2 – **மறுமை வெற்றி**

இவற்றில் உங்களுக்குத் தேவையானதை, எமது செயலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

எமது தயாரிப்புக்களான இஸ்லாமிய நூற்கள், இஸ்லாமிய ஒலிப்பதிவு நாடாக்கள், அல்லது இஸ்லாமிய அழைப்புப் பிரசுரங்கள் எதுவாயினும் அவற்றிலே தவறுகள் காணப்பட்டால், அல்லது ஆலோசனைகள் வழங்க விரும்பினால் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். இறைகூலியை மட்டுமே எதிர்பாருங்கள், அதனைப் பெற்றிட நம்முடன் இணைந்து கொள்ளுங்கள். நலவின் பால் வழிகாட்டுபவன் அதனைச் செய்தவன் போலாவான்.

இவ்வண்ணம்
உங்கள் சகோதரர்கள்
அழைப்பு வழிகாட்டலுக்கான கூட்டுறவுச் செயலகம்
அல்–மஜ்மஆ சனசமூகப்பிரிவு

بسم الله الرحمن الرحيم

# முன்னுரை

இப்பிரபஞ்சத்தைப் படைத்து, பரிபக்குவப்படுத்தி, படைப்புக்களில் மிகச்சிறந்த படைப்பாக மானிட வர்க்கத்தைத் தேர்ந்தெடுத்து பகுத்தறிவையும், விளக்கும் ஆற்றலையும் கொடுத்து ஏனைய சிருஷ்டிகளை விட மேன்மைப்படுத்தி, எப்படியும் வாழலாம் என்ற சித்தாந்தத்தை விடுத்து இப்படித்தான் வாழ வேண்டும் என்ற ஒரு வாழ்க்கைத் திட்டத்தை அமைத்துக் கொடுத்த ஏக இறைவனான அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் போற்றுதலும் உண்டாவதாக!

ஏகத்துவத்தைக் கொண்டும், உண்மையைக் கொண்டும் அகில உலகத்திற்கு அருட்கொடையாக அனுப்பப்பட்ட நற்குணத்தின் உறைவிடமான இறுதித் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மீதும், அவர்களின் வாழ்க்கைத் திட்டத்தை முழுமனே முழுமனதுடன் ஏற்று இறுதி வரைக்கும் சிறந்த முறையில் பின்பற்றியோர் அனைவர் மீதும் அல்லாஹ்விடமிருந்து சாந்தியும், நல்லருளும் உண்டாவதாக!

தங்கள் கரத்தில் சுழன்று கொண்டிருக்கும் இச்சிறு நூல் மார்க்க மேதையும், அழைப்பாளருமான கலாநிதி பஸ்லுர்ரஹ்மான அன்ஸாரி(அவர்களையும் அவர்களது தொண்டையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக!) அவர்களின்(ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்ட) பொக்கிஷமாகும். பிறமத நண்பர்களின் சந்தேகங்களுக்கு தீர்வாகவும், தூயமார்க்கமான இஸ்லாத்தில் புதிதாக நுழைந்த சகோதரர்களுக்கு மாற்றார் சிந்தனையிலும் பார்வையிலும் இஸ்லாம் ஏற்படுத்திய தாக்கங்களை அறிந்து கொள்ள வாய்ப்பாகவும், முஸ்லிம்களுக்கு மாற்றுமத நண்பர்களுடன் உரையாடும் போது, அவர்களின் இனத்தைச் சார்ந்தவர்களாலேயே எடுத்துவைக்கப்பட்ட கூற்றுக்களையே ஆதாரமாக எடுத்துக் கொள்வதற்கு இலகுவானதாகவும் இந்நூல் மிகச் சிறிய அளவில் உங்கள் முன்வைக்கப்படுகிறது.

எந்நோக்கத்தைக் கருத்தில் கொண்டு இச்சேவை செய்யப்பட்டதோ அதை அல்லாஹ் ஏற்றுக் கொள்வானாக! இதில் இக்லாஸையும், இது போன்ற சேவைகளை தமிழ் உலகிற்கு செய்வதற்கும் எமக்கு மென்மேலும் வாய்ப்பளிப்பானாக!

இது நூல் வடிவில் வெளியாவதற்கு வாய்ப்பளித்த அல்லாஹ்வுக்கு முதலிலும், பரிசீலனை செய்து ஆலோசனைகள் வழங்கிய சகோதரர்களுக்கும், இதை நூல் வடிவிலாக்கி கொம்பியூட்டர் செய்த சகோதரருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இஸ்லாமிய வழிகாட்டலுக்கான அழைப்பு மையம்.

அல் – மஜ்மா, சவுதி அரேபியா. 1418ஹி / 1997

# இஸ்லாம் ஒரு நோக்கு

## ஏகத்துவம்.

அ—ஓரிறைக் கொள்கை.

இஸ்லாம் ஏகத்துவத்தின் மிகத்தூய அமைப்பைப் போதிக்கும் அதே வேளை, பன்மைத் துவத்தை அல்லது அல்லாஹ்வுக்கு இணைகற்பிப்-பதைப் பெரிய பாவமாகக் கருதுகிறது. ஒரு முஸ்லிம் இறைவனை அவனுக்கே உரிய பெயரான 'அல்லாஹ்' என்றே அழைப்பான். ஏனெனில் 'தெய்வம்' என்ற சொல்லும் ஏனைய மொழிகளில் அதே கருத்தைக் கொண்ட சொற்களும் இஸ்லாத்தில் 'அல்லாஹ்' என்பதன் கருத்துக்-களை உள்ளடக்கமாட்டா. இஸ்லாத்தில் அல்லாஹ் என்பவன் ஒரே இறைவன்; அவன் மனைவி, மக்கள், தாய், தந்தை, உறவினர் என்ற துணைகளற்றவன்; அவன் ஒப்பு இணையற்றவன்; அவனைப் போன்று வேறு எதுவும் இல்லை; அவன் பெற்றெடுக்கவும் இல்லை, பெற்றெடுக்-கப்படவும் இல்லை; அவனே முதலானவன், இறுதியானவன், நித்தியமா-னவன், எல்லைகளற்றவன், சர்வ வல்லமை படைத்தவன், யாவற்றையும் முற்றிலும் அறிந்தவன், எல்லாவற்றையும் படைத்தவனும், அவற்றுக்கு உணவளிப்பவனும், அவற்றைப் பேணிக்காப்பவனும் அவனே. அவன் முற்றிலும் நியாயமானவன்; பலமற்றவர்களுக்கும், நசுக்கப்பட்டவர்களுக்-கும், இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் வஞ்சம் தீர்த்துக் கொள்பவனும் அவனே. அவன் பேரருள் பாலிப்பவன்; கருணை மிக்கவன், அன்பு செலுத்துபவன், நல்வழி காட்டுபவன்; மகிமை படைத்தவன்; மகத்தான-வன்; அழகானவன்; உண்மையானவன், சுருங்கக் கூறின் எல்லா உன்னதங்களையும் பெற்றவனே அவன்.

மேனாட்டு பிரபல வரலாற்றாசிரியர் *Gibbon* இஸ்லாத்தில் இறைக் கோட்பாட்டைப் பற்றிக் கூறுகையில், "முஹம்மதின் மார்க்கம் தெளி-வற்றது என்ற சந்தேகத்திக்கு அப்பாற்பட்டது. குர்ஆன் இறைவனின் ஒருமைப்பாட்டுக்கு ஒரு மகத்தான சாட்சியாகும். அழியுந்தன்மை கொண்ட அனைத்தும் அழிந்து மண்ணோடு மண்ணாக வேண்டும்,

பிறப்பவை எல்லாமே இறக்க வேண்டும், உதயமாகும் எல்லாம் அஸ்தமிக்க வேண்டுமென்ற-சிந்தனா அடிப்படையில் மக்காவில் திருத்தூதர் அவர்கள் சிலைகளையும், மனிதர்களையும், நட்சத்திரங்க-ளையும், கிரகங்களையும் வணங்குவதை நிராகரித்தார்கள். பெற்றெடுக்-கப்படாத, ஒப்பு உவமையற்ற, எங்களது இரகசிய எண்ணங்களை அறியக்கூடிய, நித்தியமான, எல்லைகளற்ற, சர்வ உலகங்களையும் படைத்தவனாகிய ஒருவனை திருத்தூதரின் சிந்தனா ஆர்வம் அறிந்து ஏற்று, துதித்தது. குர்ஆனுக்கு வியாக்கியானம் அளிப்பவர்களால் இவ்வு-தியுயர்ந்த உண்மைகளுக்கு ஆன்மீக நுணுக்கத்துடன் வரைவிலக்க-ணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தத்துவஞான ஆஸ்திகன் ஒருவன் இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்றுக் கொள்ளலாம்'' என்கிறார்.

ஆ—சர்வ உலகங்களின் ஒருமைப்பாடு

இஸ்லாத்தின் பார்வையில் படைப்பவனின் ஏகத்துவத்திலிருந்தே சர்வ உலகங்களின் ஒருமைப்பாடு பிறக்கின்றது. அதாவது, படைப்பின் ஒருமைப்பாடும் நோக்கத்தின் ஒருமைப்பாடும் ஆகும். வேறு விதத்தில் கூறினால் பிரபஞ்சம் என்பது ஓர் ஒழுக்க அமைப்பாகும்.

இ—மனித வர்க்கத்தின் ஒருமைப்பாடு

இஸ்லாம் முழு மனித வர்க்கத்தையும் ஓர் ஒருங்கமைந்த ஒருமையாக, ஒரு தனிக்குடும்பமாகக் கருதுகிறது. இனம், நிறம், மொழி, பிரதேசம் போன்ற இவ்வுலக பேதங்கள், ஒரு கூட்டத்தாரை விட இன்னொரு கூட்டத்தார் உயர்ந்தவர்களெனக் கூறிக்கொள்ள காரணங்களாக அமையா; என இஸ்லாம் வற்புறுத்தி கூறுகிறது. 'பெறுமதி' உள்ள ஒரேயொரு பேதம் ஆன்மீக அடிப்படையிலானது. அதாவது 'தக்வா' அல்லது 'பக்தியும் நன்னடத்தையும்' என்ற பேதமாகும்.

இஸ்லாத்தைப் பற்றி விமர்சித்த பிரபல ஆங்கில எழுத்தாளர் பேராசிரியர் *H. A. R. Gibbon* பின்வருமாறு கூறுகிறார்: "இனங்களுக்கிடையே புரிந்துக்கொள்ளும் தன்மையும் கூட்டுறவும் நிறைந்தவொரு மகத்தான பாரம்பரியம் இஸ்லாத்தில் உள்ளது. அந்தஸ்து, வாய்ப்பு, முயற்சி என்பனவற்றில் சமத்துவம் அளிப்பதன் மூலம், இத்துணை எண்ணிக்-கையிலும் மனித வர்க்கத்தின் வேறு பட்ட இனங்களையும் ஒருங்கே சேர்த்த ஒரு சாதனை வேறு எந்த சமூகத்தவருக்கும் இல்லை. கீழைத்தேய, மேற்கத்திய நாடுகளின் பெரும் சமூகத்தவரிடையேயுள்ள

எதிர்ப்புக்கள் ஒழிக்கப்பட்டு அதனிடத்தில் கூட்டுறவு நிலைக்க வேண்டுமாயின் அம்முயற்சியில் இஸ்லாம் குறுக்கிட்டு பங்குகொள்ளுதல் ஓர் அத்தியாவசிய நிகழ்வாயிருக்க வேண்டும்''

ஈ—மார்க்கத்தின் ஒருமைப்பாடு

இஸ்லாத்தின் பார்வையில் மனித சிந்தனா சக்தி ஒரு பெரிய, வலுமிக்க உடைமையாயிருந்தாலும் அதற்கு இயல்பான வரையறைகளுண்டு என்பதனால் சாதாரண விஞ்ஞானமோ அல்லது அனுபவரீதியான விஞ்ஞானமோ மனிதனை அடிப்படை உண்மைகளைப் பற்றிய ஓர் உறுதியான அறிவு நிலைக்கோ அவ்வுண்மைகளின் பேரில் உருவாக்கப்பட்ட ஒரு வாழ்க்கை நெறிக்கோ இட்டுச் செல்ல முடியாது. எனவே உறுதியான அறிவுநிலையை அடைந்து கொள்வதற்கு மனிதனுக்குள்ள ஒரேயொரு மார்க்கம் இறை வழிகாட்டலாகும். உண்மையிலேயே இந்த மார்க்கம் உலகில் மனித வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே திறந்திருக்கின்றது. அல்லாஹ், தனது தூதர்களை அனுப்பி அவர்கள் மனித வர்க்கத்திற்குக் காட்டிக்கொடுப்பதற்கான அவனுடைய வழிகாட்டல்களையும் அவர்கள் மூலம் இறக்கி வைத்துள்ளான். ஒரே மூலத்திலிருந்து ஊற்றெடுத்ததன் காரணமாக இவ்வாறு இறக்கிவைக்கப்பட்ட எல்லா வேதங்களும் ஒன்றாகவே இருந்துள்ளன. அதாவது இஸ்லாம் என்ற பெயரிலேயே இருந்துள்ளன.

அல்லாஹ்வின் தூதர்கள் அவரவருக்கென வரையறுக்கப்பட்ட காலங்களில் சேவை யாற்றுவதற்கென ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு சமூகத்தவரிடையேயும் தோன்றி வந்துள்ளனர். காலத்துக்குக் காலம் அனுப்பப்பட்ட வழிகாட்டல்களுள் மனிதன் தன் சொந்தக் கருத்துக்களையும் இடைச் செருகல்களையும் புகுத்தியதினால் அவ்வழிகாட்டல் ஒன்றில் மறைந்து போயின அல்லது இழிவானவையாயின. இதனால் புது அறிவுரைகளுடன் மேலும் தூதர்கள் அனுப்பப்பட்டு மனித வர்க்கம் பால்யத்திலிருந்து முதிர்ச்சி வரை வளர்ச்சியடைந்தது. இறுதியில் மனித சமுதாயம் முதிர்ச்சி நிலையை அடைந்ததும் (மனித வர்க்கம் ஒரு குடும்பம் என்ற நிலையை அடைய அண்மித்துக் கொண்டிருந்தபோது) குறிப்பிட்ட ஒரு சமூகத்தவருக்கென்ற வழிகாட்டலாக இல்லாமல் முழு மனித இனத்துக்குமான எல்லாக் காலங்களுக்குமான ஒரு முழுமையான

நிரந்தர வேதம் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இறக்கப்பட்டது. இதற்கு முன்னால் இறக்கப்பட்ட வேதங்களையெல்லாம் மீள உறுதிப்படுத்தி அதன் மூலம் மார்க்கத்தின் ஒருமைக்கு முத்திரையிடும் அவ்வேதம் புனித குர்ஆனாகும். அது இறக்கப்பட்ட தூதர் மனித இனத்தின் தலைவர் முஹம்மத் ﷺ* அவர்கள் ஆவார்கள்.

இவ்வாறு ஆதி மனிதனும் இறைத்தூதருமான ஆதம் அவர்களில் இருந்து நூஹ், இப்ராஹீம், மூஸா, ஈஸா (அல்லாஹ் இவர்கள் அனைவர் மீதும் அருள் பாலிப்பானாக) வரையிலான எல்லா தூதர்களும், இறுதியாகத் தோன்றிய தூதரும் தூதுத்துவத்திற்கு இறுதியானவருமான திருத்தூதர் முஹம்மத் ﷺ அவர்களும் மனித இனத்தின் வழிகாட்டிகளாவார்கள். அல்லாஹ்வால் இறக்கப்பட்ட வேதங்களெல்லாம் புனித நூற்களாகும். என்றாலும், திருக்குர்ஆன் அதன் மூலவடிவத்தூய்மையுடனே இன்னும் காணப்படுவதனாலும் உயிர் கொண்ட முதலாவது மனிதனின் காலம் தொட்டே நல்வழி நடத்தப்பட்ட எல்லா மக்களாலும் பின்பற்றப் பட்டு வந்த இஸ்லாத்தை அது உள்ளடக்கி இருப்பதாலும் மனிதர்கள் அனைவரும் திருக்குர்ஆனை மட்டுமே பின்பற்ற வேண்டும்.

உ - ஆண் - பெண் ஒருமைப்பாடு

ஆண், பெண்ணின் தொழிற்பாடுகள் பிரிக்கப்பட்டிருப்பதனால் உலகின் சில கலாசார அமைப்புக்களில் பெண் ஆணில் நின்றும் வித்தியாசமான, அவனை விட தரம் குறைந்த ஒரு வர்க்கத்தைச் சார்ந்தவளாகவே கருதப்படுகிறாள்; இக்கோட்பாட்டின் பேரில் மனிதப் பண்பற்ற முறையில் நடத்தப்படவும் செய்கிறாள். இஸ்லாமோ, இக்கருத்தினை முற்றிலும் நிராகரித்து, ஆண், பெண் இரு சாராரும் ஒரே மூலத்திலிருந்து பிறந்தவர்களென்றும் அதனால் ஒரே மனித அந்தஸ்தைப் பெற்றவர்களென்றும் போதிக்கின்றது. ஆண், பெண் சில விடயங்களில் வேறுபட்டாலும் அவர்களது தொழிற்பாடுகளும் ஈடுபாடுகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகளல்ல, மாறாக ஒன்றுக்கொன்று துணையாய் நிற்க அமைக்கப்பட்டவை. எனவே எல்லா அம்சங்களிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும்

---

* அல்லாஹ் அவர்கள்மீது அருள் பாலிப்பானாக!

இடையேயுள்ள இயற்கையான தொடர்பு மனித அபிவிருத்திக்கு இன்றியமையாத அன்பும் சமரசமும் கொண்டதாக இருக்கும்.

ஊ—சமூக வர்க்கங்களின் ஒருமைப்பாடு.

ஒரு சமூகத்தில் நிலவக் கூடிய எல்லா சமூக மோதல்களையும் (பல்வேறு பிரச்சினைகளையும் தீர்த்துவைப்பதன் மூலம்) நிர்மூலமாக்கி சமூகவர்க பேதங்களற்ற ஒரு சமூகத்தை உருவாக்குவது இஸ்லாத்தின் நோக்கங்களில் ஒன்றாகும்.

பொருளியல் துறையில், செல்வம், செல்வம் படைத்தவர்களிடையே மட்டும் சுழன்று வர அனுமதிக்கலாகாது என்ற கோட்பாட்டை இஸ்லாம் நிறுவுவதோடு இஸ்லாமிய சட்டங்களின் மூலம் ஒரு 'திறமைகளின் கூட்டுறவு ஒன்றியத்தை' உருவாக்கும் நோக்கத்தையும் கொண்டுள்ளது.

அரசியல் துறையில், 'நல்வழி நடப்பவர்களின் கூட்டுறவு ஒன்றியம்' ஒன்றினை நிர்மானிப்பதை இஸ்லாம் வற்புறுத்துகிறது.

முற்றாக நோக்கும் போது, இஸ்லாமிய அரசு ஒரு 'சமநல அரசு' ஆகும். இவ்வரசில் இறைமை அல்லாஹ்விற்கு மாத்திரமே உரித்தான—தாகும். அல்லாஹ்வின் பெயராலும் அவனுடைய நாட்டத்திற்கேற்பவும் ஏனைய மனிதரை ஆட்சி செய்வதைத் தவிர வேறு எந்த அடிப்படை—யிலும் ஒரு மனிதன் ஏனையவர்களை ஆட்சி செய்ய உரிமை பெற்றவ—னல்லன். எவரும் (அரச தலைவன் உட்பட) சட்டத்திக்கு அப்பாற்—பட்டவராக இருக்கமாட்டார். ஏக நியாயமே இஸ்லாத்தின் அறைகூவல்: நன்னடத்தையை நிறுவுவதே அதன் குறிக்கோள்.

ஏனைய விடயங்களில் இஸ்லாத்தைக் கண்டித்து எழுதியவர்கள் கூட இஸ்லாமிய சமூக ஒழுக்கவியலின் நற்பாங்குகளைப்பற்றிப் பாராட்டி எழுதியுள்ளனர். உ+ம்: *H.G. Wells* கூறுகிறார்: "உலகில் இதற்கு முன்னிருந்த எந்தவொரு சமூகத்தையும்விட பரவலான (கொடுமை, சமூக நசுக்கல் போன்ற வற்றிலிருந்து கூடுதலான நிவாரணத்தையளித்த) ஒரு சமூகத்தை இஸ்லாம் உருவாக்கியது" *(Outline of History. page # 325)*

*H. A. R. Gibbon* கூறுகிறார்: "மேற்குலகில் அதிதூரம் விலகியி—ருக்கும் இரு துருவங்களுக்கிடையே இஸ்லாம் இன்னும் சமநிலையை தாபித்து வருகிறது. ஐரோப்பிய தேசிய உணர்வினால் ஏற்டும் அராஜகத்—

தையும் ரஷ்ய கம்யூனிசத்தின் இராணுவ நெறியையும் ஒன்று போல் இஸ்லாம் எதிர்கிறது. அதே வேளை இன்றைய ஐரோப்பாவினதும் ரஷ்யாவினதும் குணாதிசயமாக விளங்கி வரும் வாழ்கையின் பொருளாதார அம்சத்தில் மூழ்கிப்போகும் மோகத்திற்கு இஸ்லாம் இன்னும் அடிமையாகிவிட வில்லை" *(Whither Islam ? page # 378)*

*Prof. Louis Massignon* கூறுகிறார்: "மிக்க சமத்துவமுடைய ஓர் எண்ணக்கருவினை வலியுறுத்தும் தன்மையுடையது இஸ்லாம்... தனவந்தர்களின் முதலாளித்துவத்திற்கும் தொழிலாளரின் கம்யூனிஸத்திற்கும் இடைப்பட்ட ஒரு நடுத்தர நிலையை இஸ்லாம் வகிக்கிறது" *(Whither Islam ? page # 378)*

எ—மனித தொழிற்பாட்டின் ஒருமைப்பாடு.

மனிதப் பாங்கினை இஸ்லாம் ஓர் 'ஒருமை' யாகவே கணிக்கிறது. எனவே மனிதப் பாங்கினை 'இவ்வுலக' பாங்கு என்றும் 'மதச்சம்பந்தமான' பாங்கு என்றும் வித்தியாசப்படுத்துவது விஞ்ஞான ரீதியற்றதெனவும் சிந்தனைக்கு ஒவ்வாதது எனவும் அர்தமற்றதெனவும் கருதுகிறது. ஒரு முஸ்லிமின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் சிறந்த வாழ்கை அல்லாஹ்வுக்காக வாழப்படும் வாழ்க்கையாகும்.

ஒப்பு நோக்கு மதவியல் ஆசிரியர்: *Dudley Wright* என்பவர் பின்வருமாறு கூறுகிறார்: "இஸ்லாம் ஒரு மதம் மட்டுமல்ல: அது வாழவேண்டிய ஒரு வாழ்க்கை முறையுமாகும். தினசரி வாழ்க்கையின் சிறு விடயங்கள் என சில வேளை குறிப்பிடப்படுபவை பற்றிய அறிவுரைகளை குர்ஆனில் காணலாம். ஆனால் வாழ்க்கை அல்லாஹ்வுக்காக வாழப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு பார்க்குமிடத்து இவை சிறு விடயங்களல்ல. ஒரு முஸ்லிம் அல்லாஹ்வுக்காக மாத்திரமே வாழ்கிறான். அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவனாகுதலும் தனது எல்லா நடவடிக்கைகளின் போதும் அல்லாஹ்வைப்பற்றிய அறிவை விருத்தியடையச் செய்ய முயற்சிப்பதுமே ஒரு முஸ்லிமின் குறிக்கோள். ஓர் உண்மையான முஸ்லிம் தொட்டிலிலிருந்து மண்ணறை வரை அல்லாஹ்வுக்காக மாத்திரமே உயிர் வாழ்கிறான்"

## அல்லாஹ்வுக்கு அடிபணிதல்.

இஸ்லாம் என்ற சொல் அடிபணிதல் என்ற கருத்தைத்தரும். இது ஷரீஆவில், 'இறைநாட்டத்திற்கும் ஆணைக்கும் அடிபணிதல்' என்பதைக் குறிக்கும். இவ்வகையில் இஸ்லாம் 'இயற்கை' யுடன் ஒத்ததாகும். ஏனெனில் இயற்கையிலுள்ள ஒவ்வொன்றும் எவ்வித தயக்கமுமின்றி இறைநாட்டத்திற்கு அடிபணிகிறது. ஒரு மனிதனைப் பொறுத்தவரை அவன் சொந்த விருப்பத்தின் பேரில் இஸ்லாத்தினை தேர்ந்தெடுத்து அல்லாஹ்வின் படைப்புகளில் ஏனையவற்றைப் போலவே தானும் இயங்கி தனது இறுதி விதியை அடைந்து கொள்ளவேண்டும். ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற கவிஞனும் தத்துவ ஞானியுமான *Goethe* பின்வருமாறு கூறுகிறார்: "ஒவ்வொருவரும் அவரவரது சொந்தப் பிரத்தியேகக் கருத்தைப் புகழ்ந்து கொள்ளுதல் புரிந்துக் கொள்ளுந் தன்மையில்லாததனாலாகும், (ஏனெனில்) இஸ்லாம் என்பது இறைவனுக்கு அடிபணிதலாகும், நாங்கள் எல்லோரும் வாழ்வதும் மடிவதும் இஸ்லாத்திலேயாகும்"

## இஸ்லாமும் இயற்கையும்.

மனித இயல்பிற்கிணங்கவும் சுற்றிலுமுள்ள இயற்கையுடன் சமரசமாக உயிர் வாழ்வதும், வளர்ச்சியுறுவதும் முஸ்லிமாக இருத்தலேயாகும். என்பது மேலே குறிப்பிடப்பட்ட கூற்றிலிருந்து தெளிவாவதுடன் அதனையே குர்ஆனும் ஆணித்தரமாக வலியுறுத்துகிறது.

## இஸ்லாமும் ஒழுக்க நெறியும்.

இறை நாட்டத்திற்கு அடிபணிதல், இயற்கைச் சட்டத்துடன் இணங்குதல் என்ற கருத்துக்கள் மனித வாழ்வில் நடைமுறைப்படுத்தப்படும் போது ஓர் அதியுயர்ந்த ஒழுக்கநெறி உருவாகும், இஸ்லாம் அதிஉன்னத ஒழுக்கநெறியைத் தரும் மார்க்கமாகும்.

*First & Last Things* என்ற நூலில் *H. G. Wells* கூறுகிறார்: "இஸ்லாத்தின் தன்வயப்படுத்தும் சக்தியும், ஒழுக்கநெறியும், அடிபணிதலும் மனிதருக்கு ஓர் உன்னத, கௌரவமிக்க மார்க்கமாகும் என நான் நினைக்கிறேன். நமது நவீன உலகில் அதன் சூத்திரங்கள் இல்லாவிட்டாலும் அதன் தாத்பரியம் நிறைந்து காணப்படுகின்றது. வல்லமை படைத்த ஓர் இறைவனை போற்றுவதாலும், திறமையாக நிலைநாட்டப்படும் கண்டிப்பான சட்டமும் ஒழுங்கும் கொண்ட

அவனுடைய இராச்சியத்திற்குச் சேவையாற்றுவதாலும் மனிதர்கள் விமோசனம் கண்டுள்ளார்கள் என்பதிலும் விமோசனம் காணுவார்கள் என்பதிலும் எனக்கு ஐயமில்லை."

ஒரு முஸ்லிம், 'இறைவனின் நாட்டத்திற்கு மார்க்க ரீதியில் அடிபணிந்து விடுவதன் காரணமாக துயரின்போது, உதாரண சீல பொறுமையை' கையாளுவதோடு 'அழிவுமிக்க விபத்துக்களைப் பாராட்டத்தக்க மன உறுதியுடன் தாங்கிக்கொள்கிறான்' என்று *Friedrich Delitzsch* எனும் ஜெர்மனியைச் சேர்ந்த அறிஞர் ஏற்றுக் கொள்கிறார். *(Die Welt des Islam page : #28 )*

## சத்தியத்தின் மார்க்கம்.

உண்மை என்பதன் எண்ணக்கரு இஸ்லாமிய கொள்கை, கோட்பாடுகளின் கேந்திரமாக அமைவதுடன் இஸ்லாமிய சர்வாங்க அமைப்பின் எல்லா இடத்திலும் பரவி நிற்கிறது. அதாவது விரிவான இஸ்லாமிய ஒழுக்க நெறியின் ஓர் அடிப்படைப் பண்பாக, 'உண்மையாயிருத்தல்' என்பது இருப்பது மட்டுமன்றி ஒரு முஸ்லிமின் குணத்தின் ஆதாரக்கல்லாகவும் இருக்கிறது. புனித குர்ஆனில் அல்லாஹ்வே 'உண்மை' என்றும் 'உண்மையானவன்' என்றும் முஹம்மது நபி ﷺ அவர்கள் 'உண்மையை சுமப்பவர்' என்றும் குர்ஆன் 'உண்மை' என்றும் மரணத்திற்குப் பின் நல்லவர்கள் வாழுமிடம் 'உண்மையின் உறைவிடம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இஸ்லாமும் நன்னடத்தையும்.

அதியுயர்ந்த தூய்மையையும் மிதமான நடத்தையையும் வலியுறுத்தும் மார்க்கம் இஸ்லாமாகும். ஏனைய சில மதங்கள் வலியுறுத்தும் சிந்தனைத் தூய்மையையும் உணர்ச்சிகளின் தூய்மையையும் தூய இஸ்லாமும் வற்புறுத்தும் அதே வேளை, மனித பண்புகளெல்லாமே ஒரே சீராக வளர்ச்சியுற வேண்டுமென்ற அடிப்படைக் கோட்பாட்டை இஸ்லாம் கொண்டிருப்பதனால் அது உடலின் தூய்மையையும் வலியுறுத்துகிறது. இதன் விளைவாக, உடலுக்கோ மனதுக்கோ இவையிரண்டிற்குமோ பங்கம் விளைவிக்கக் கூடிய, சுகயீனத்தை ஏற்படுத்தக்கூடிய எல்லா குடிவகைகளையும் உணவுவகைகளையும் கண்டிப்பாகத் தடைசெய்கிறது. இவ்வாறு மது, அபின் போன்ற போதைப் பொருட்களை மட்டும்

அதன் விலக்கல் ஆணைகள் உள்ளடக்காமல், ஆரோக்கியமான மனித வளர்ச்சிக்குச் சேதம் விளைவிக்கக் கூடிய எல்லா உணவுப் பொருட்க- ளையும் அது உள்ளடக்கும். இறுதியாகப் பார்க்குமிடத்து, இஸ்லாத்தில் விலக்கல் என்பது: தீய சிந்தனை, தீய உணர்ச்சி, தீச்செயல்கள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கும்.

## இஸ்லாமும் அழகும்.

சில மதங்களைப் போல், இஸ்லாம் இவ்வுலகை வெறுக்கும் மார்க்கமோ அடிப்படைப் பண்பைதையும் மறுக்கும் மார்க்கமோ அல்ல. மாறாக அது தீர்மானமாகவும் உறுதியாகவும் நிறைவு காணும் ஒரு நெறியாகவும் இருக்கிறது. அல்லாஹ்வினால் மனிதனுக்கு அருளப்பட்ட எல்லா மனோ சக்திகளையும் செயல்திறன்களையும் கொண்டு நிறைவுகாணும் ஒரு மார்க்கமாகவே இருக்கிறது. எனவே இஸ்லாமிய ஒழுக்க, ஆத்மீக நெறிகளுக்குட்பட்டதும், அவற்றினால் கட்டுப்படுத்தப்பட்டதுமான அழகியற்கலை, இஸ்லாமிய வாழ்க்கையின் ஒரு பகுதியாகும். இஸ்லாத்திற்கு 'அழகு' எனும் எண்ணக்கரு முழு மனித நடவடிக்கை- களில் மாத்திரமின்றி முழு பிரபஞ்ச அமைப்பிலேயே ஊடுருவிப் பரவி நிற்கும், *"அல்லாஹ் அழகானவன்; அவன் அழகையே நேசிக்கிறான்"*[✲] என்பது திரு நபி வாக்கியமாகும். எண்ணத்திலும் சொல்லிலும் செயலிலும் அழகு இருக்க வேண்டும் என்பது போன்றே எல்லா ஆக்கபூர்வமான வேலைகளிலும் அழகு இருக்க வேண்டும் என்பதே இஸ்லாத்தின் நோக்கமாகும்.

இஸ்லாத்தின் ஆத்மீக, ஒழுக்கநெறி வரம்புகளின் கட்டுப்பாட்டுக்கமைய கலையை அது அனுமதிக்கிறது. ஆனால் அதன் குறிக்கோளோ 'கலைக்காக வாழ்க்கை' என்பதல்ல. மாறாக 'வாழ்க்கைக்காக கலை' என்பதாகும். இதன் மூலம் மட்டுமே மனித வாழ்க்கையின் விவேகமான ஒரு சீரான குறிக்கோளை- அதாவது ஆத்மீக அழகையும் ஒழுக்க அழகையும் உடல் அழகையும் இணக்கமாகச் சேர்த்துக் கொள்ளுதல் என்பதை- அடைந்து கொள்ளலாம்.

---

✲ நஸல்: முஸ்லிம் - 131

## இஸ்லாமும் விவேக அறிவும்.

மனிதனின் விவேகத்தை அவனின் பகுத்தறியக்கூடிய ஒரு விசேட குணமாகவும் அல்லாஹ்வின் உயர்ந்த ஒரு நன்கொடையாகவுமே இஸ்லாம் கருதுகிறது. அத்துடன் சமூக, இயற்கைத் தோற்றங்கள் சம்பந்தமாகவும் குர்ஆனின் தூதைப் புரிந்து கொள்வதற்கும் அதன் வழிகாட்டலை பின்பற்றவும் மனிதன் தனது விவேக அறிவை பயன்படுத்த வேண்டுமென புனித குர்ஆன் மென்மேலும் தூண்டுகிறது. இதன் மூலம் மனித வாழ்வில் 'எதையும் தனிப்பட்ட ரீதியில் சீர்தூக்கிப் பார்ப்பதன்' முக்கியத்துவத்தை நிலைநாட்டுகிறது.

## இஸ்லாமும் மூடநம்பிக்கையும்.

இஸ்லாம் ஒரு தீர்க்கமான விவேக ரீதியான மார்க்கமாகும். மூட நம்பிக்கையின் பேரில் பலராலும் ஏற்றுக்கொள்ளப்படும் மர்மமான மத அனுஷ்டான முறைகளையும் மர்மம் சூழ்ந்த சுயேச்சையான கொள்கைகளைக் கொண்ட மதங்களையும் இஸ்லாம் எதிர்க்கிறது.

இஸ்லாம் மூடநம்பிக்கைகளை மறுத்து விவேக அறிவை உறுதிப்படுத்துவதைப் பற்றி *Godfrey Higgins* இவ்வாறு கூறுகிறார்: "அவருமுஹம்மத்டைய மார்க்கத்தை மத ஞாபக சின்னங்களோ, சிலைகளோ, படங்களோ, கடவுளின் தாயாரோ மாசுபடுத்துவதில்லை. நற்செயல்களற்ற விசுவாசத்தின் பயன், மரணப்படுக்கையில் பாவத்திற்கு வருந்துதலின் பயன், மகா திருச்சபையினால் அளிக்கப்படும் பாவமன்னிப்பு, பாவசுத்திகரிப்பு தண்டனையிலிருந்து விடுதலை -பாவசங்கீர்த்தனம்-பாவங்களை ஒப்புக்கொள்ளுதல்- இவை போன்ற கொள்கைகள் முதலில் மனிதனைக் களங்கப்படுத்தி பின்னர் அவனைவிட களங்கமான இழிவு நிலையையடைந்த மதகுருக்களிடம் அவனை ஒப்படைத்து விடும். இவ்வாறான கொள்கைகள் அவருடைய மார்க்கத்தில் இல்லை. தாயாரோ, மர்மமோ, போலியான அற்புதச் செயலோ இல்லாத ஒரே இறைவனை போற்றுதலும், அந்த சிருஷ்டிகர்த்தாவை மட்டும் போற்றும் கடமையை பிரச்சாரம் செய்வதற்கென மனிதனான அவர் அனுப்பப்பட்டார் என்பதை ஏற்றுக்கொள்வதுமே ஏகத்துவவாதியின் இலகுவான கொள்கையாகும்."

*(Apology for Mohammad)*

## இஸ்லாமும் செயற்பாடும்.

சிக்கலான, விளங்காத சில சூத்திரங்களை ஏற்றுக்கொள்ளுதலின் அடிப்படையில் மனிதனின் விமோசனத்திற்கு வழிகோலும் மதங்களுக்கு இஸ்லாம் நேர் முரணாகவுள்ளது. எனவே 'விசுவாசத்திற்கும், செயலுக்கும்' தக்க முக்கியத்துவத்தை அது வழங்குகிறது. மனித விமோசனத்தைப் பற்றி குறிப்பிடும் இடங்களில் எல்லாம் புனித குர்ஆன் விமோசனத்திற்கு அடிப்படையாக 'நேரான விசுவாசம்' 'நற்செயல்' என்ற இரண்டையுமே கொள்கிறது. இதில் 'நேரான விசுவாசம்' என்பதை மூலகாரணமாகவும் 'நற்செயல்' என்பதை தொடரும் பலனாகவும் இஸ்லாம் உறுதிப்படுத்துகிறது.

## இஸ்லாமும் சீரான வளர்ச்சியும்.

'உள்ளுறையான திறமைகளை உரிய வாய்க்கால்கள் வழியாக நெறிப்படுத்துவது' என்ற 'ஜெயம்' எனும் நிலையை அடைந்து கொள்வதே இஸ்லாமிய வாழ்க்கையாகும். எனவே ஒருவன் வளர்ச்சியடைவதற்காக தொடர்ந்து முயன்றுக் கொண்டேயிருக்க வேண்டும். இவ்வளர்ச்சி தூய்மையினால் கட்டுப்படுத்தப்பட்டும் இறைவழிகாட்டலால் ஒளியூட்டப்பட்டும், இருக்கவேண்டும். ஆத்மீகம், உள்ளம், ஒழுக்கம், உடல் என்ற மனித வாழ்வின் எல்லாக் கூறுகளையும் உள்ளடக்கியதும் சமச்சீரானதுமாக அமைந்த வளர்ச்சியாக இருக்கவேண்டும்.

இஸ்லாத்தின் சமச்சீரான தன்மையையும் அது ஊக்குவிக்கும் வளர்ச்சியையும் போற்றிப்புகழ்ந்த பேராசிரியர் *H. A. R. Gibbon* என்ற கீழைத்தேயவியலாளர் பின்வருமாறு கூறுகிறார்: "மேற்குலகில் இஸ்லாம் இன்னும் மிகைப்படுத்தப்பட்ட எதிரிகளுக்கிடையே ஒரு சமச்சீரான நிலையை நிலை நாட்டுகிறது. ஐரோப்பியாவின் கலாசார வாழ்க்கைத்துறை குறிப்பாக அதன் ஆத்மீக வாழ்க்கைத்துறை வளர்ச்சியடைய வேண்டுமென்றால் இஸ்லாமிய சமூகத்தினுள்ளே காணப்படும் வலிமைகளும் ஆற்றல்களும் இன்றியமையாதவை" *(Whither Islam, page # 378)*

## இஸ்லாமும் விஞ்ஞானமும்.

விஞ்ஞானத்திலிருந்து ஏனைய மதங்கள் விலகி நின்ற போதும் இஸ்லாம் விஞ்ஞான ஆராய்ச்சியை ஒரு மார்க்கக் கடமையாக்கியுள்ளது. என்றாலும் இவ்வாராய்ச்சியின் நோக்கம் லௌகீக சுகங்களை நுகர்வதும்

சகமக்களை துன்புறுத்துவதுமல்ல அல்லாஹ்வின் செயலமைப்புகளை அறிந்துக்கொள்வதன் மூலம் இறையன்பு அதிகரிப்பதும், 'இயற்கை விசைகளை' கட்டுப்படுத்தும் சக்தியை பெற்றுக்கொள்வதன் மூலம் மனித சமுதாயத்திற்கு சேவை செய்வதுமே இஸ்லாத்தின் விஞ்ஞான ஆராய்ச்சியின் நோக்கமாகும்.

சமூக நாகரிக வளர்ச்சியியலாளரான *'Briffault'* என்பவர் நவீன விஞ்ஞான யுகத்தை ஆரம்பித்து வைப்பதில் இஸ்லாம் வகித்த பங்கினைப் பற்றி கருத்துத் தெரிவிக்கயில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "இஸ்லாமிய கலாசாரத்தின் தீர்க்கமான அடையாளங்களைக் காணமுடியாத எந்தவொரு அம்சமும் ஐரோப்பிய வளர்ச்சியில் இல்லை. என்றாலும், நவீன உலகின் நிரந்தரத்தன்மையாகவும் விசேட பாங்காகவும் இருப்பதோடு நவீன உலகின் வெற்றிக்கு மேன்மையான மூலகாரணமாகவும் அமைந்தது, இயற்கையியலும் விஞ்ஞான விசாரணையியலும் சேர்ந்த சக்தியேயாகும். இச்சக்தியை உருவாக்குவதில் காணப்படும் இஸ்லாமிய கலாச்சாரத்தின் அடையாளங்கள் அத்துணை தெளிவாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் வேறெங்குமில்லை. முற்றிலும் புதுமையான கோட்பாடுகளை ஆச்சரியமடையத்தக்கதாக கண்டுபிடிக்கும் அளவில் மாத்திரம் எமது விஞ்ஞானத்துறை அரேபியர்களது விஞ்ஞானத்துறைக்கு கடன்பட்டு இருக்கவில்லை. அதைவிட கூடுதலான அளவில் விஞ்ஞானம் அரேபிய கலாசாரத்திற்கு கடன்பட்டுள்ளது. அது பிறந்ததே அரேபிய கலாசாரத்தினாலாகும். நாங்கள் மேலே கண்டது போல் பண்டைய உலகம் விஞ்ஞானத்திற்கு முற்பட்டதாகும். கிரேக்கர்களுடைய வானவியலும் கணிதமும் பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையாகும். அவை கிரேக்க கலாசாரத்தோடு முற்றாக கலந்து இணையவுமில்லை. கிரேக்கர்கள் முறைப்படுத்தினர், அனுமானித்தனர்; தத்துவக்கோவைகள் செய்தனர். ஆனால் விஞ்ஞான ரீதியாக ஆராய்ச்சி செய்தல், தீர்மானமான அறிவினை சேகரித்தல், விஞ்ஞானத்தின் நுண்ணிய முறைகள், நுணுக்கமான நீடித்த அவதானிப்பு, அனுபவ ரீதியான ஆராய்ச்சி என்பவற்றிக்கு தேவையான பொறுமையான போக்கு கிரேக்க மனப்பான்மைக்கு முற்றாக முரணானதாய் இருந்தது. ஆராய்ச்சியில் ஒரு புது தாத்பரியம், ஆராய்ச்சி செய்வதில் புது முறைகள்,

பரிசோதனை, அவதானிப்பு, அளத்தல் என்ற முறையின் பயனாகவும், கிரேக்கர் அறிந்திருக்காத ஓர் அமைப்பில் கணிதம் வளர்ச்சியுற்றது என்பதன் பயனாகவுமே இன்று நாங்கள் விஞ்ஞானம் என்று அழைப்பது ஐரோப்பாவில் தோன்றியது. அந்த தாத்பரியத்தையும், முறைகளையும் ஐரோப்பிய உலகிற்கு அறிமுகஞ்செய்தது அரேபியரே... பரிசோதனை முறையை அறிமுகம் செய்த பெருமை *Roger Bacon* என்பவரையோ அதே பெயருடைய பின் வந்தவரையோ சாராது. ரோஜர் பேக்கனோ முஸ்லிம்களின் விஞ்ஞானத்தை பின்பற்றி கிறிஸ்தவ உலகில் அதனை ஆரம்பித்து வைத்தவர் மாத்திரமே. அவரது சகபாடிகள் உண்மையான அறிவை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் அதற்கு ஒரே வழி அரபு மொழி அறிவும் அரேபிய விஞ்ஞான அறிவுமே என்று கூறுவதிலிருந்து அவர் ஓயவில்லை. பரிசோதனை முறையை யார் ஆரம்பித்து வைத்தது என்ற விவாதங்களெல்லாம் ஐரோப்பிய நாகரிகத்தின் ஆரம்பத்தைப் பற்றி பிரமாண்டமான அளவில் தவறாக அறிவிக்கும் முயற்சியின் ஒரு பகுதியேயாகும். பேக்கனுடைய காலமாகும் போது பரிசோதனை முறை பரவலாகக் காணப்பட்டதோடு ஐரோப்பா எங்கிலும் ஆர்வத்துடன் வளர்க்கப்பட்டும் வந்தது. நவீன உலகிற்கு அரேபிய நாகரிகம் செய்த மகத்தான சேவை விஞ்ஞானத்தை அளித்ததே. ஐரோப்பாவை மீள உயிர் பெறச் செய்தது விஞ்ஞானம் மட்டுமல்ல, இஸ்லாமிய நாகரிகத்தின் வேறு அனேகமான அம்சங்களுமாகும். அவை ஐரோப்பிய வாழ்க்கை முறைக்கு முதல் ஒளியை வழங்கின." *( Making of Humanity page # 190 - 202 )*

*H. G. Wells* என்ற இன்னுமொரு மேற்கத்திய வல்லுநர் கூட பின்வருமாறு ஏற்றுக்கொள்ள வேண்டி இருந்தது: "ஒளியும் சக்தியும் (அதாவது விஞ்ஞான முறை) என்ற கொடையை நவீன உலகம் இலத்தீன் வழியாக பெற்றுக் கொள்ளவில்லை மாறாக, அரேபியர் மூலமே பெற்றுக்கொண்டது"

மத்திய காலத்தில் இஸ்லாத்திற்கு எதிராக விதைக்கப்பட்ட விரோத மனப்பான்மையின் விளைவாக இஸ்லாத்தின் உன்னதங்களை ஏற்றுக் - கொள்வதில் மேற்கு உலகம் தயக்கம் காட்டியே வந்துள்ளது. ஆனால் படிப்படியாக விரும்பியோ விரும்பாமலோ உண்மையை ஏற்றுக்கொள் -

கின்றனர், ஒத்துக்கொள்கின்றனர். எனவே, மேற்கண்டவாறு விஞ்ஞான முறையையும் விஞ்ஞானத்திற்கான ஊக்கத்தையும் முஸ்லிம்களே மேற்கு உலகிற்கு கொடுத்தார்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றை முஸ்லிம்களே புனித குர்ஆனிலிருந்து பெற்றுக்கொண்டனர். இறுதியாக இவ்வுண்மையும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உ+ம்: *Stanislaus Guyard* கூறுகிறார்: "எங்கள் யுகத்தின் ஏழாவது நூற்றாண்டில் பண்டைய உலகம் வேதனையில் துவண்டு கொண்டிருந்த போது அதனை அரேபியர் வெற்றிக்கொண்டது அதற்கு புது இரத்தத்தையூட்டியது... முஹம்மத் அவர்களுக்கு (அரேபியருக்கு) குர்ஆனை வழங்கினார், இதுவே புது கலாச்சாரத்தின் ஆரம்பமுனையாக அமைந்தது" *(Encyclopedie des Sciences Religieuses Book IX, page# 501)* இஸ்லாத்தின் எதிரிகளுக்கு சவால் விட்டும் புனித குர்ஆனைப்பற்றி குறிப்பிட்டும் *Dr. A . Bertharand* பின்வருமாறு கூறுகிறார்: "இப்பெரும் நூலை அவர்கள் வாசித்து அதிலுள்ளவற்றைப் பற்றி சிந்திக்கட்டும், ஒவ்வொரு பந்தியிலும் சிலைவணக்கத்திற்கும் லௌகீகத்திற்கும் எதிரான இடையுறா தாக்குதலை அதில் காணலாம், படைப்பின் மர்மமான இயற்கைத் தோற்றங்களையும் சிறப்பான அற்புதங்களையும் தூதுவர் அவர்கள் தமது மக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவற்றுடன் அவர்கள் தொடர்பு கொள்ள வேண்டுமென தொடர்ந்து வற்புறுத்துகிறார்கள். என்பதை அவர்கள் வாசிப்பார்கள்.. இக்கட்டுரையின் போது நாம் குறிப்பிட்டது போன்று, இந்நூலின் அறிவுரைகளை பின்பற்றியவர்களே இன்று கூட ஆச்சரியத்தில் மூழ்கடிக்கும் ஒரு நாகரிகத்தை உருவாக்கியவர்களாவார்கள். *(Contribution des Arab are Progres des Sciences Medicales page: 6)*

*Emmanvel Deutsch* கூறுகிறார்: "குர்ஆனின் உதவியுடன் அரேபியர் மனித வர்கத்திற்கு ஒளியூட்ட ஐரோப்பாவிற்கு வந்தார்கள், எங்கும் இருள் சூழ்ந்திருந்த வேளையில்... மெய்யியல், மருத்துவம், வானவியல், கவி எனும் பொன்னான கலை என்பவற்றை கீழைய தேசங்களுக்கு போலவே மேல் தேசங்களுக்கும் கற்றுக்கொடுக்க அவர்கள் மாத்திரமே வந்தனர், நவீன விஞ்ஞானத்தின் தொட்டிலை ஆட்டி விடவும் கிறனடா

வீழ்ச்சியுற்ற தினத்தையிட்டு எங்களை என்றென்றும் கண்ணீர் வடித்து மனம் வருந்த வைக்கவும் வந்தனர்."

## இஸ்லாமும் உழைப்பும்.

இஸ்லாத்தில் எல்லா நேர்மையான உழைப்பும் புனிதம் வாய்ந்ததோடு மனித வளர்ச்சியின் உயிர் நாடியுமாகும். "*மனிதன் எதற்காக முயற்சிக்கின்றானோ அதைத்தவிர்த்து அவனுக்கு வேறெதுவும் கிடைப்பதில்லை*"[†] மேலும் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள்: "*நீர் கையால் உழைத்து உண்ணும் உணவை விட சிறந்த உணவை யாரும் உண்ண மாட்டார்.*"[††] "*உங்களில் ஒருவர் தம் முதுகில் விறகு சுமந்து உழைத்துச் சாப்பிடுவது, பிறரிடம் யாசித்து அவர்கள் கொடுப்பதையோ அல்லது கொடாது தடுப்பதையோ விட சிறந்ததாகும்*"[†††] என்று கூறினார்கள். இவ்வாறு, இஸ்லாத்தில் 'சோம்பேறித்தனம்' பாவமும் 'ஊக்கத்துடன் உழைப்பது' சீரிய பண்புமாகும் என்று உழைப்பாளர் வர்க்கத்திற்கு ஊக்கம் அளித்துள்ளது.

## இஸ்லாமும் ஒழுக்கமும்.

ஒழுக்கத்தை இஸ்லாம் 'இறை கட்டளைக்கு அடிபணிதல்' என்பதன் அடிப்படையில் அமைத்து இறை பண்புகளை மாதிரியாகக் கொள்ளும் ஒழுக்க இலட்சியத்தை மனித சமுதாயத்திற்கு வழங்குகிறது. இதன் அடிப்படையில் தான் முஹம்மது ﷺ அவர்கள் "*உங்களில் சிறந்தவர் நற்பண்புடையவராவர்*"[††††] என்று ஆர்வமூட்டியுள்ளார்கள்.

"இறை நாட்டம் என கொள்ளப்படுவதற்கு பூரணமாகவும் உள்ளார்த்தமாகவும் அடிபணிதலை நோக்கமாகக் கொண்ட நடத்தை-யை உள்ளடக்கிய மார்க்க ஒழுக்கமே அதி சிறந்ததாகும். புலன்களின் அழிக்க முடியாத சில தன்மைகளின் கட்டுப்பாட்டுக்கமையவும் இறைத்தன்மையுடன் இசைவானதாக கருதப்படுவதுமான ஒரு வாழ்க்-கை முறையை சந்தோசமாகவும் முழு மனதோடும் ஏற்றுக் கொள்ளுதலே

---

† அல்குர்ஆன் - 53: 39

†† நூல்: புகாரி - 1930

††† நூல் புகாரி - 1932

†††† நூல்: புகாரி - 3295

-புனிதத்துவத்தின் இலட்சியமே- இவ்வடிபணிதல். எனவேதான் இவ்வுலகிலோ அல்லது மறு உலகிலோ நன்னடத்தைக்கு நற்கூலி கிடைக்கு மென்றோ அல்லது நன்னடத்தையை சுயநல நோக்குகளில்லாமல் அதன் தன்மைக்காகவே பின்பற்றவோ எண்ணி நன்னடத்தையை ஒரு தனி நோக்கமாகக் கொள்ள ஆர்வம் பிறக்கின்றது. மார்க்க ஒழுக்கம் சம்பந்தமான இக்கருத்தினால் மனித நடத்தையில் அதியுயர்ந்த இலட்சியத்தை உருவாக்கியுள்ளது." என்று *Sir Richard Gregory* கூறுகிறார். *(Religion in Science and Civilisation page# 63)*

## இஸ்லாமும் சமாதானமும்.

'சாந்தி' எனும் கருத்துள்ள 'ஸலாம்' என்ற பதம் இஸ்லாம் என்ற பதத்துடன் நெருங்கிய மூல ஒற்றுமை கொண்டுள்ளது. இவ்வாறு 'சாந்தி' என்ற கருத்து 'இஸ்லாம்' என்ற பதத்தின் ஒரு முக்கியப் பகுதியாகும். உண்மையிலேயே இக்கருத்து இஸ்லாம் மார்க்கத்தின் எல்லாப்பகுதிகளிலும் ஊடுருவிப் பரவியுள்ளது. ஏனெனில், புனித குர்ஆனின் கூற்றின் பிரகாரம் அல்லாஹ் 'அஸ்ஸலாம்' அதாவது சாந்தி(யின் பிறப்பிடம்) ஆவான். ஒரு முஸ்லிமின் வாழ்த்து இஸ்லாமிய வாழ்க்கையின் இலச்சியத்தை உள்ளடக்கிய 'அஸ்ஸலாமு அலைக்கும்' அதாவது உமக்கு 'சாந்தி உண்டாவதாக' என்பதாகும். புனித குர்ஆன் மனித சமுதாயத்தை அழைக்கும் அந்த நல்லவர்களின் உறைவிடம் 'தாருஸ்ஸலாம்' அதாவது 'சாந்தியகம்' ஆகும் எனக்கூறுகின்றது.

எனவே ஒரு முஸ்லிமின் வாழ்க்கையில் ஒரு இலட்சியம் எல்லாத் துறைகளிலும் சாந்தியை எய்திக்கொள்வதாகும். தன்னையே அறிந்து கொள்ளுதல் மூலம் தன்னுள் தன்னுடன் சாந்தி, நல்லெண்ணம் என்ற அடிப்படை மனப்பான்மை மூலம் ஏனையவர்களுடன் உறவு கொள்வதில் சாந்தி, இறை நாட்டத்திற்கு அடிபணிதல் மூலம் அல்லாஹ்வுடன் சாந்தி...

## இஸ்லாமும் ஜிஹாதும்.

சமாதானத்தைப் பற்றிய இஸ்லாமிய கருத்தோ கற்பனைக்கெட்டாத ஒன்றில்லை. ஏனெனில் இஸ்லாம் என்பது செயற்படும் மார்க்கமாகும். ஒரு போராட்ட (ஜிஹாத்)மார்க்கமாகும். எனவே அது இயற்கைக்கு மாறான அல்லது பிரயோகிக்க முடியாத ஒரு நடவடிக்கை மார்க்கத்தை நிய-

மிக்கவில்லை. இவ்வாறு, உ+ம்: உலக விவகாரங்களில் இஸ்லாம் சமா-தானத்தையும் நல்லெண்ணத்தையும் விருத்தி செய்வதிலிருந்து மீளாது நிற்கின்றது. என்றாலும் தர்மத்தின் நோக்கில் யுத்தம் தவிர்க்கப்பட முடியாத நிலையில்-நியாயத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்க வேறு எந்த வழியும் இல்லாத நிலையில்- முஸ்லிமகள் யுத்தத்தில் பங்கு பற்றுவதை இஸ்லாம் அனுமதிக்கின்றது.

இஸ்லாமிய வரலாற்றின் யுத்தங்கள் சம்மந்தமாக இஸ்லாத்தை பற்றிய தீய எண்ணத்துடன் தவறாக வியாக்கியானங்கள் அளித்தவர்களால் பெரிதும் அபவாதம் கூறப்பட்ட பதமான 'ஜிஹாத்' என்பது 'போராட்டம்' என்ற கருத்தைக் கொண்டது: இஸ்லாத்தில் இப்போராட்டம் இரண்டு வகைப்படும்.

i-உளரீதியான போராட்டம். இதன் தொழிற்பாடு முற்றாக ஆத்மீகம் சம்மந்தமானதாகும். ii-கூட்டு அளவில் தீயசக்திகளை தோற்கடிக்கும் போராட்டம். இதுவே கூட்டு ஜிஹாத் ஆகும்.

பிரசாரம், சீர்திருத்தம் ஆகியன மூலம் இஸ்லாத்தை பரவச் செய்து அதைமக்களின் கூட்டு வாழ்க்கையில் நிலை பெறச்செய்வது என்ற சமாதான சால்புடையதாகவும் கூட்டு ஜிஹாத் இருக்கலாம்; அல்லது ஆக்கிரமிப்பளாருக்கு எதிராகத் தொடரப்படும் யுத்தச் சால்புடையதா-கவும் அது இருக்கலாம்.

யுத்தம் செய்ய இஸ்லாம் அனுமதித்திருப்பது தற்பாதுகாப்பு நோக்கங்களுக்காக மாத்திரமே. யுத்தம் செய்வதற்கான எல்லா அதர்ம உந்துதல்களையும் இஸ்லாம் தடுப்பதோடு இது காலம் வரை மனிதன் கண்டுள்ள எல்லா யுத்த தர்மங்களையும் விட மேன்மையிலும் மனிதத் தன்மையிலும் சீரிய ஒரு யுத்த தர்மத்தை இஸ்லாம் கற்பிக்கின்றது.

*O. Houdas* கூறுகிறார்: "...குர்ஆன் கூறுகிறது *'உங்களுக்-கெதிராக போராடுபவர்களுடன் அல்லாஹ்வின் பாதையில் நீங்களும் போராடுங்கள், ஆனால் அவர்களை முதலில் தாக்கி அநீதி இழைத்துவிடாதீர்கள், நிச்சயமாக அல்லாஹ் அநீதவான்களை நேசிப்பதில்லை'* [8] ஆக்கிரமிப்-

---

8 அல் குர்ஆன் – 02: 190

புக்களிலிருந்து இஸ்லாத்தினைக் காத்துக் கொள்வதற்காக ஜிஹாத் செய்ய வேண்டியிருந்தது... ஆனால் யுத்தம் முடிவுற்றதும் தோல்வியுற்ற மக்கள் அவர்களுடைய சொந்த சட்டங்களையும் மத நம்பிக்கைக-ளையும் பின்பற்ற இடங்கொடுத்து முஸ்லிம்கள் அவர்கள் பால் என்றும் விசால மனப்பான்மையுடனேயே நடந்துவந்தனர்." *(La Grande Encyclopaedie, Book 20, page # 1006 )*

*E. Alaexander Powell* கூறுகிறார்: "முஸ்லிம்கள் நாடுகளை கைப்பற்றிய யுத்தங்களின் போதெல்லாம் அனேக கிறிஸ்தவ நாடுகள் வெட்கிக்கக் கூடிய அளவு விசால மனப்பான்மையுடனேயே நடந்து கொண்டனர்" *(The Struggle for Power in Muslim Asia page # 48)*

## இஸ்லாத்தில் வற்புறுத்தலில்லை.

பலவந்ததமான மத மாற்றுதலைப் பொறுத்தவரையில், இது குர்ஆனின் மூலம் தெளிவாகத்தடை செய்யப்பட்டுள்ளது: *"இஸ்லாத்தில் நிர்பந்தம் இல்லை..."*✱ முஸ்லிம்கள் ஒரு கையில் வாளுடனும் மறுகையில் குர்ஆனுடனும் முஸ்லிம் அல்லாதவர்களை மதமாற்ற வெளிப்பட்டார்கள் என்ற பிரச்சாரம் வெறும் கட்டுக்கதையாகும். உண்மையிலேயே இக்கதை எவ்வளவு ஆதாரமற்றதென்றால் *Rev. Dr. O. Leary* போன்ற இஸ்லாத்தின் எதிரியே பின்வருமாறு ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

"மத வைராக்கியம் படைத்த முஸ்லிம்கள் உலகெங்கிலும் வெற்றி-யீட்டி தாம் வெற்றி கொண்ட இனத்தவர்களையெல்லாம் வாள் முனையில் இஸ்லாத்தினை ஏற்கச் செய்தார்கள் என்ற கதை வரலாற்றாசிரியர்களால் மீள மீளக் கூறப்பட்ட கட்டுக்கதைகளில் அதி மடத்தனமான தொன்று என்பதை வரலாறு தெளிவுபடுத்துகிறது." *(Islam at the Cross Roads, page: 8 )*

## இஸ்லாமும் சகோதரத்துவமும்

பொதுவாக அல்லாஹ்வின் படைப்பினங்கள்பாலும் குறிப்பாக மனித குடும்பத்தின்பாலும் அன்பு செலுத்துவதை இஸ்லாம் போதிக்கின்றது.

---

✱ அல் குர்ஆன் – 2: 256

*"பூமியிலுள்ளவர்கள் மீது நீங்கள் பரிவு காட்டுங்கள், வானத்திலுள்ளவன் உங்கள் மீது பரிவு காட்டுவான்"****** என்று நபி ﷺ அவர்கள் கூறுகினார்கள். மனித சமுதாயம் ஒரு சகோதரத்துவ ஐக்கியம் என்று இஸ்லாம் கருதுவதோடு அது, 'இஸ்லாமிய சகோதரத்துவத்தை' தன்னகத்தே கொண்டிருப்பதாகவும் உறுதிப்படுத்துகிறது தொழில் அடிப்படையில் சமூகப்பிரிவினை, குலம், நிறம், இனம், மொழி, பிரதேசம் என்ற பேதங்கள் யாவும் 'இஸ்லாமிய சகோதரத்துவத்தில்' விலக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன. பெரிய மனித சமுதாய சகோதரத்துவத்திற்காக இறை வழிகாட்டலின் அடியார்களாகவும் இறைவழிகாட்டல் எனும் அறிவைப் போதிப்பவர்களாகவும் பணிபுரியும் சேவையும் இஸ்லாமிய சகோதரத்துவத்திற்கே ஒதுக்கப்பட்டுள்ளது. இஸ்லாமிய சகோதரத்துவம் என்ற வட்டத்துக்குள் கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒரு நடத்தை நெறியை இஸ்லாம் தரும் அதே வேளை பெரும் மனித சமுதாயத்துடன் முஸ்லிம்கள் கொள்ளும் தொடர்புகளில் அவர்கள் பின்பற்ற, 'மனிதர் பால் நேசம்' என்ற ஒரு திட்ட வட்டமான நெறியையும் இஸ்லாம் போதிக்கின்றது.

*Dr. Leitner,* "முஹம்மதிய சகோதரத்துவம் வெறும் வார்த்தையல்ல, எல்லா விசுவாசிகளும் சமமானவர்கள்; அத்தோடு அவரவரே அவரவருடைய தலைமைக்குரு"என்று கூறுகிறார். *(Muhammadanism. page #: 18)*

ஒல்லாந்தைச் சேர்ந்த கீழைத்தேய வியலாளரான *Snouck Hurgronje* பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "மனித இனங்களின் ஐக்கியத்தாபனம் என்ற இலச்சியத்தை ஏனைய கொள்கை கோட்பாடுகளைவிட இஸ்லாம் நெருக்கமாக அண்மித்துள்ளது. ஏனெனில் முஹம்மதுடைய மார்க்கத்தின் அடிப்படையில் எழுப்பப்படும் சர்வதேச ஐக்கிய தாபனம் எல்லா மனித இனத்தவர்களினதும் சமத்துவம் என்ற கொள்கையை ஏனைய சமூகத்தவர் வெட்கமடையும் அளவிற்கு பாரதூரமாகக் கொள்கிறது." *(Muslim World Today)*

## இஸ்லாமும் புரோகிதமும்

வணங்குதல் என்ற துறையில், ஒரு மத குருவின் சிபாரிசு இன்றியே மனிதனுக்கும் இறைவனுக்குமிடையில் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதை இஸ்லாம் ஆதரிக்கிறது. எனவே ஒவ்வொரு

முஸ்லிமான ஆணும் பெண்ணும் அவரவரது மதகுருவாக இருப்பர்.

இஸ்லாமிய அறிஞர்களையோ பள்ளிவாசல்களில் கூட்டுத் தொழு-கைக்கு தலமைதாங்கும் இமாம்களையோ மதகுருக்களாக கருதுவது தவறாகும். இஸ்லாத்தை அறிந்த யாரும் தொழுகைகளை முன்நின்று நடத்தலாம். உலமாக்கள் வெறும் கல்விமான்களும் இஸ்லாமிய அறிவில் தேர்ச்சி பெற்றவர்களுமாவர். முழு இஸ்லாமிய சகோதரத்துவத்தின் பொறுப்பில் உள்ள ஒரு கடமையையே அவர்கள் நிறைவேற்றுகிறார்கள்.

ஏனெனில் உ+ம்: பிராமண இனத்திலுள்ளவர்கள் மாத்திரமே இந்து மதத்தின் போதனைகளைப் பெற்றிருக்கும் சிறப்புரிமையை வழங்கும் இந்து மதத்தைப் போலல்லாமல் ஒவ்வொரு முஸ்லிமான ஆணும் பெண்ணும் இஸ்லாமிய போதனைகள் பற்றிய அறிவை பெற்றிருக்க வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது.

பிரபல கிறிஸ்தவ பிரசாரகரும் இஸ்லத்தைப் பற்றிக் கண்டித்து விமர்சனங்கள் செய்தவருமான *Rev.W. Wilson Cash* கூட பின்வரு-மாறு ஒத்துக்கொண்டார். “இஸ்லாத்திற்கேயுரிய ஒரு பெருமையை இஸ்லாம் முஸ்லிம்களுக்கு வழங்குகிறது. இறைவனுடன் நேரடித்-தொடர்பு என்பது இஸ்லாத்தின் பலமிக்க கவர்ச்சிகளுள் ஒன்றாகும். *(The Expansion of Islam, page # 177)*

## இஸ்லாமும் மானிட கௌரவமும்.

சுதந்திரம் எல்லா மானிடர்களினதும் பிறப்புரிமை என்று வலியுறுத்துவது: இன, நிற, பிரதேசப் பேதங்களற்றதாக மனித சமத்துவத்தை வரைய-றுத்து அறிவிப்பது: மனித வர்க்கம் பாவத்தில் உற்பத்தியானதென்ற பாவத்தின் உடன் பிறப்புக் கொள்கையையும் அதே போன்று ஏனைய கொள்கைகளெல்லாவற்றையும் நிராகரிப்பது, ஆதத்திலிருந்து வழிவந்த-வர்களெல்லாம் இறைவனின் அதியுயர்ந்த படைப்பு என்பதை உறுதிப்ப-டுத்துவது, இறைபண்புகளை மாதிரியாகக் கொள்வதை மனிதனின் ஒழுக்க நெறி இலட்சியமாக்குவது, சர்வ உலகங்களையும் வெற்றி கொள்வதே மனிதனின் இலக்காகும் என்று சுட்டிக்காட்டுவது என்பவற்-றின் மூலம் இஸ்லாம் மானிட கௌரவத்தை கற்பனை செய்து பார்க்கக் கூடிய உயர்ந்த சிகரத்தின் மேல் ஏற்படுத்தி வைத்துள்ளது.

இஸ்லாம் தோன்றிய போது இஸ்லாத்திற்கு முன் தோன்றிய கலாச்சா-ரங்களும் மதங்களும் மானிட கௌரவத்தைப்பற்றி அறிவித்திருந்த பிழையான கருத்துக்களின் விளைவாக மனித சமுதாயம் பல்வேறு வழிகளில் துன்புமுற்றுக் கொண்டிருந்தது. தொழில் அடிப்படையில் சமூகப்பிரிவனை, குலம், சாதி, என்ற பெயரில் கொடுமை புரியப்பட்டு வந்தது. மனித சமுதாயத்தின் பெரும் பகுதிகள் அடிமைகள் என்ற நிலைக்குத் தாழ்த்தப்பட்டிருந்தன. பழங்காலந் தொட்டே நிலவி வந்த அடிமை முறை பைபில் போன்ற வேத நூல்களின் அனுமதியுடனும் எவ்வித தர்ம மனவுறுத்தல்கள் இல்லாமலும் அரேபியர் உட்பட ஐரோப்பாவினதும் ஆசியாவினதும் பல்வேறு இனத்தவர்களாலும், மக்க-ளாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இச்செயல்களுக் கெதிராக இஸ்லாம் தனது ஆண்மைமிகு ஆட்சேபனைக் குரலை எழுப்பியது. என்றென்றுமே நசுக்கப்பட்டவர்களினதும் அடக்கியாளப்பட்டவர்களினதும் இரட்சகர் என்ற தானத்திற்கு இஸ்லாத்தைக் கொண்டு சென்ற ஒரு தத்துவத்தையும் ஒரு நடைமுறையையும் அது உலகத்திற்கு அளித்து நின்றது.

இஸ்லாத்தின் எதிரிகளால் அதனைப்பற்றிப் பரப்பப்பட்ட பல தவறான கருத்துக்களில் அடிமை முறை பற்றியதும் ஒன்றாகும். அடிமை முறையை ஒழிப்பதற்கு இஸ்லாம் கொண்ட பங்கினை சரிவரப்புரிந்து கொள்ள இந்நூலாசிரியரின் *'Islam and Slavery'* என்ற நூலை வாசகர்கள் பார்க்கவும். இங்கு இந்த சுருக்கமான கட்டுரையிலோ, சென்ற நூற்றாண்டின் பாரபட்சமற்ற ஒரு முஸ்லிமல்லாத எழுத்தளார் கூறியதை மட்டும் கூறி சுருக்கிக் கொள்கிறோம். "அவருடைய(முஹம்மத்) அடிமை முறைச் சட்டம் என்னவென்றால், அடிமைகள் உங்களிடம் வந்தால், அவர்களை உரிமை கோரி யாரும் வராவிட்டாலும் பத்தொன்-பதாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ இங்கிலாந்தின் பிராந்தியங்களில் நிலவி வந்த சட்டத்தின் கீழ் போன்று அவர்களை சிறையிலிட்டு பகிரங்க விற்பனையில் விற்று விடாதீர்கள். மாறாக அவர்களை மீட்டுக் கொள்-ளுங்கள். 'அவர்களை வெளியேற்றி விடுவது தடைசெய்யப்பட்டுள்ளது' இவ்வாறு கூறியவரோ ஏழாம் நூற்றாண்டின் அரேபிய வனங்களில் பிரசாரம் செய்தவராவார்" *(West Minister Review # 10 , page: # 221)*

எதிர்ப்பு மனப்பான்மையுடனும் பக்க சார்புடனும் இஸ்லாத்தைப்பற்றி விமர்சனம் செய்த ஒல்லாந்து பேராசிரியர் *Snouck Hergronje* கூட பின் வருமாறு கூற நேர்ந்தது: ''முஹம்மதின் கொள்கை அடிமை முறை மறைந்துபோக விதிக்கப்பட்டதொன்றாகும்.''

**இஸ்லாம் கூறும் பலதாரமும், பாலியலும்.**

ஆண் பெண்ணின் அடிப்படையான சமத்துவத்தைப்பற்றிய இஸ்லாமிய கருத்து 'ஒருமையின் மார்க்கம்' என்ற பகுதியில் ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. சார்பற்று வரலாற்றை சரியாக உணர்ந்து கொள்ளும் போது பின்வரும் கூற்று சந்தேகமற நிரூபிக்கப்படுகிறது. 'மனித வரலாற்றின் தொடக்கக் காலத்திலிருந்தே பெண்களை ஆக்கிரமித்திருந்த கட்டுப்பாட்டினை அகற்றி பல நூற்றாண்டுகளுக்குப்பின் வரை இங்கிலாந்தில் பெண்களுக்குக் கொடுக்கப்படாதிருந்த சமூக அந்தஸ்த்தையும் சட்ட உரிமைகளையும் அவர்களுக்கு அளித்தது இஸ்லாமே! *(Lady Evelyn Cobbold 'Pilgrimage to mecca')* ஆனால் பலதார மணம் பற்றி இஸ்லாத்தின் எதிரிகள் செய்துள்ள பரவலான பிரச்சாரம் காரணமாக அதனைப்பற்றி விசேஷமாக இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

முதற்கண், பலதார மணத்தை இஸ்லாம் நூதனமாக உருவாக்கவுமில்லை. அதனை எந்த விதத்திலும் கடமையாக்கவுமில்லை. இஸ்லாத்திற்கு முன்னைய சமூகங்களில் தொன்று தொட்டே இம்முறை வழக்கத்திலிருந்து வந்ததோடு உதாரணத்திற்கு புனித அந்தஸ்துள்ளவர்கள் என ஏற்றுக்கொள்ளப்படுபவர்கள் கூட இம்முறையைக் கடைப்பிடித்து வந்துள்ளனர், என்பதை பழைய ஏற்பாட்டில் காணக்கூடியதாக உள்ளது. இச்சமூகங்களில் இம்முறை எந்த வித சட்டத்தினாலும் கட்டுப்படுத்தப்படவில்லை. இஸ்லாம் தோன்றிய காலத்திலும் அரேபிய சமூகத்தில் இந்நிலையே இருந்தது. இஸ்லாம் செய்தது என்னவென்றால் இம்முறையைச் சட்டத்திட்டங்களுக்கு உட்படுத்தியது.

இஸ்லாம் இயற்கையோடு சம்பந்தப்பட்ட ஒரு மார்க்கமாகும். எனவே அது பாலியற் குற்றச் செயல்களையும் சமூக கெடுதிகளையும் பாரதூரமாகக் கண்டிக்கிறது. விளைவாக, சமூக சுகத்தை நிலைநாட்டுவதற்காக பலதார மணம் ஒரு இயற்கை பரிகாரமாக அமையக் கூடிய சந்தர்ப்பங்களிலெல்லாம் அதனை வரையறுக்கப்பட்ட முறையிலும் கட்டுப்படுத்-

தப்பட்ட முறையிலும் அனுமதிப்பது இஸ்லாத்திற்கு ஒரு இயல்பாகவே அமைந்தது. உ+ம்: யுத்தம் ஆண்–பெண் விகிதாசாரத்தை மாற்றி ஆண்களைவிட பெண்கள் எண்ணிக்கையில் கூடியிருக்கும் நிலையில் இரண்டேயிரண்டு வழிகள்தான் உண்டு. அவையாவன: விபச்சாரம் அல்லது பலதார மணம். பெண் சமூகத்தின் ஒழுக்க நச்சுகத்திற்காகவும் சமூக நல்வாழ்விற்காகவும் இஸ்லாம் விபச்சாரத்தையல்லாது பலதார மணத்தையே விரும்புகிறது. இதே போன்று முதல் மனைவி மலடானவ–ளாகவோ சுகப்படுத்த முடியாததொரு வியாதியினால் பீடிக்கப்பட்டவளா–கவோ இருந்தால் இரண்டேயிரண்டு சாத்தியங்களே உண்டு அவையா–வன: முதல் மனைவி விவாகரத்துச் செய்யப்பட்டு ஒரு புது மனைவி மணம் புரியப்படலாம், அல்லது இரண்டாவது மனைவியுடன் முதல் மனைவி தனது அந்தஸ்தில் எவ்வித மாற்றமுமின்றி தொடர்ந்து இருக்–கலாம். முதலாவது வழியை கையாண்டாலோ கணவனற்ற, துயர்மிக்க–நிலையே முதல் மனைவிக்கு நேரிடும். இரண்டாவது வழியோ அவளுக்கு தகாததை செய்யத்தூண்டுதல்கள் இல்லாத கௌரவமிக்க ஒரு வழமையான வாழ்கையை அளிக்கும். அனேகமாக மிகையான பாலியலுணர்வு கொண்டு தனது பாலியற்தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக ஒருவருக்கு மேற்பட்ட பெண்களை நாடும் ஓர் ஆணின் வியாதியை மருத்துவ ரீதியாக சுகப்படுத்த முடியாத நிலையிலும் பலதார மணத்தை கையாளப்பட வேண்டியிருக்கும். மேற்சொன்ன சந்தர்ப்பங்–களிளெல்லாம், வெறும் முறைமையான ஒரு மனைவியுடைமையை பாசாங்காக கடைபிடிப்பதை விட பொறுப்புக்கள் மிக்கதாகவும் கட்டுப்–பாடுகளுடையதாகவும் பலதார மணத்தை இஸ்லாம் அனுமதித்–திருப்பது ஆரோக்கியமிக்க ஒரு வழியாகும்.

பல பதிகளையுடைமை (அதாவது: ஒரு பெண் பல கணவர்களை மணத்தல்) இஸ்லாத்தில் அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில் உளவியல் ரீதியாக அது சீரற்றதாகும். சமூகவியல் ரீதியாக அது நடைமுறைப்–படுத்த முடியாததாகும். உடலியல் ரீதியாக அது சம்பந்தப்பட்டவர்களின் உடல் ஆரோக்கியத்திலும் அபாய கரமான விளைவுகளை ஏற்படுத்–தலாம். பல பதிகளையுடைமை முறையை பின் பற்றும் சில ஆதி இனத்தவரிடையே சம்போக தொற்று நோய்கள் பெருமளவில்

காணப்படுகின்றன.

பலதார மணம் பற்றி கருத்துத் தெரிவிக்கையில் *Dr. Anai Besant* பின் வருமாறு குறிப்பிடுகிறார்: "மேற்கில் பாசாங்கான ஒரு மனைவியுடைமை காணப்படுகின்றது. ஆனால் உண்மையிலேயே பொறுப்பற்ற பல மனைவி-களுடைமை நிலவுகிறது. வைப்பாட்டி வைத்திருப்பவனுக்கு அவள் சலித்துப் போனதும் அவள் கைவிடப்பட்டு விலை மாதாகிறாள். ஏனெனில் அவளுடைய எதிர்காலத்திற்கு அவளது முதல் காதலன் பொறுப்புடையவனல்ல. அவளது நிலைமையும் பலதார மணம் பின்பற்றப்படும் ஒரு வீட்டில் பாதுகாப்பாக வாழும் மனைவியினதும் தாயினதும் நிலைமையை விட நூறு மடங்கு இழிவானதாகும். இரவு நேரங்களில் மேற்கத்திய நகர வீதிகளில் கும்பலாகக் கூடும் ஆயிரக்க-ணக்கான கிலேசம் நிறைந்த பெண்களைக் காணுமிடத்து இஸ்லாத்தி-னை அதன் பலதாரத்தைக் கண்டிக்கும் உரிமை மேற்கத்தியவர்களுக்கு இல்லை என்பதை நாம் நிச்சயமாக உணர முடியும். நெறி தவறி நடக்கச் செய்யப்பட்டு, சில வேளை சட்டத்தின் வரம்பிற்கப்பாற்பட்ட முறைத-வறிப் பிறந்த ஒரு குழந்தையைக் கையிலேந்திய வண்ணம் வீதிக்குத் தூக்கி எறியப்பட்டவளாக, பாதுகாப்பு, கவனிப்பாரற்ற நிலையில் இரவிர-வாக வருவோர் போவோர் எல்லோரினதும் கொடுமைகளுக்கு இலக்காகி, தாய்மைப் பேற்றை இழந்தவளாக, எல்லோராலும் இகழப்பட்டவளாக வாழ்வதை விட பலதாரமுள்ள ஒரு வீட்டில் வாழ்வதும் தனது முறைப்-படி பிறந்த குழந்தையை ஏந்தியவளாக ஒரு கணவனுடன் மட்டும் இணைந்திருப்பதும், மரியாதை சூழப்பட்டவளாக நிற்பதும் ஒரு பெண்ணுக்கு மேன்மை மிக்கது, சந்தோசமிக்கது, கண்ணியமிக்கது.

மேற்கத்திய சமூக அமைப்பைப் பற்றி விமர்சிக்கும் இன்னும் ஒருவர் குறிப்பிடுகிறார்: "ஒரு மனைவிக்கு மேற்பட்டவர்களை ஒருவன் மணம் புரிவதை குற்றச்செயலாகக் கிறிஸ்தவ மகாசபையின் கொள்கைக் கேற்ப ஏற்படுத்தப்பட்டிருக்கும் அரச சட்டம், அதே சட்டத்தின் ஆதாரத்தைக் கொண்டு இலச்சக்கணக்கான பெண்கள் கணவர்களை அடைவதையும் பிள்ளைகள் பெறுவதையும் சட்ட விரோதமானதாக ஆக்குகின்றது. ஒரு மனைவியுடைமை முறைக்காக யேசு கிறிஸ்த்து பரிந்து பேசினார் என்பது உண்மையல்ல, இப்பிரச்சினையை சமூகவியல் ரீதியாக நோக்கினாலுமோ

ஒழுக்கவியல் ரீதியாக நோக்கினாலுமோ நாகரிகத்தின் அதியுயர்ந்த நியமங்களுக்கு பலதார மணம் முறையானதல்ல என்பதை எடுத்துக்-காட்டலாம். இகழப்பட்ட, நிராகரிக்கப்பட்ட பெண்கள் என்ற மேற்கத்திய பிரச்சினைக்கு இக்கருத்து ஒரு பிரயோகபிரகாரத்தை வழங்குகிறது. மாறாக, தொடர்ந்த, அதிகரித்த விபச்சார வைப்பாட்டி முறையும் கணவனற்ற துயரம் தோய்ந்த நிலையுமே விளையும்.

இஸ்லாத்தில் பெண்களின் அந்தஸ்தைப்பற்றி நன்கு புரிந்து கொள்ள வாசகர்கள் இந்நூலாசிரியரின் *(Woman Under Islam)* என்ற நூலைப்பார்க்கவும்.

## மீட்சிக்குரிய மார்க்கம்.

மண்ணறைக்கப்பால் மீட்சி-மறுமையில் மீட்சி என்பதைப்பற்றிக்கூட இஸ்லாம் ஆராய்கிறதென்பதோடு இவ்வுலக மீட்சிக்கு உத்தரவாதமும் அளிக்கிறது என்பது இஸ்லாத்தின் ஒரு சிறப்பம்சமாகும். இவ்வுலக மீட்சிக்காக இஸ்லாம் ஒழுக்க பூரணத்துவத்தையும் சமூக வளர்ச்சி-யையும் பொருளாதார நியாயத்தையும் அரசியல் நல் வாழ்வினையும் நிச்சயப்படுத்தும் ஒரு விவரமான வழிகாட்டலை தருகிறது-சுருங்கக்கூறின், இவ்வுல வாழ்வில் உண்மையான மனித ஆனந்தத்-தையும் மனித வர்க்கத்தின் சகலாம்ச இணக்கமான விருத்தியையும் நடைமுறையிலேயே அறிந்து கொள்வதற்கும் எய்திக் கொள்வதற்கும் தேவையான எல்லா வழிகாட்டல்களையும் தருகிறது.

*Laura Leccia Vaglieri* கூறுகிறார்: "எமது மானிட இயல்பின் ஆசைகளுக்கேற்றவாறு செய்யப்பட்ட ஒரு கொள்கை முறையை தருவதில் இஸ்லாம் திருப்தி கொள்ளவில்லை. பிரயோகித்து அல்லது பிரயோகிக்காது விடுபடும் உயரிய கற்பனைகளைக் கொண்ட ஒரு நெறியை தாபிக்கும் ஒரு மார்க்கமாக இஸ்லாம் இருக்கவில்லை. மாறாக அது ஒரு வாழ்க்கை நெறியை அளிக்கிறது. கிரமமான, திட்டமான அடிப்படையில் எமது ஒழுக்க நெறிக்கான மூல தர்மங்களை ஏற்படுத்-துகிறது: விருத்தியடையக் கூடியதும் மிகப் பரந்த அளவிலான அறிவியல் முன்னேற்றத்துடன் ஒத்ததுமான சட்ட திட்டங்கள் மூலம் மனிதன் தன் பாலும் ஏனையோர் பாலும் கொண்ட கடமைகளை நுணுக்கமாக முறைப்படுத்துகிறது: அம்மார்க்கத்தின் சட்டங்களுக்கு

இறை அங்கீகாரம் அளிக்கிறது. அதன் செல்வாக்கு மனிதனுக்குத் தொடர்ந்து பெறக் கூடியதும் அனுகூலமானதாகவும் இருப்பதனால் அது நிச்சயமாக எமது ஆழ்ந்த பாராட்டைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ள-தாகும். *(Apologre de Lislamisme, page # 88)*

**அசலான வேத நூலைக் கொண்ட மார்க்கம்.**

இஸ்லாத்தின் இறை நூலான புனித குர்ஆன் உலகில் ஏனைய மார்க்க நூற்களில் நின்றும் தனிச்சிறப்புப் பெற்று திகழ்வதற்கு மூன்று அடிப்படைத்தகுதிகளுண்டு. அவை:

1. அதன் மூல வாசகங்கள் அசலானது.
2. அதன் இலக்கியம் சம்பூரணத்துவம் வாய்ந்தது.
3. அதன் வழிகாட்டல் விவேகத்தன்மையும், எல்லாவற்றையும் உள்ளடக்கும் வன்மையும், ஆழ்ந்த தன்மையும் கொண்டது.

புனித குர்ஆனின் அமைப்பு முறையின் அழகினைப்பற்றிக் குறிப்பிடு-கையில் *Paul Cassanova* பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கிறார். "முஹம்மதிடம் அவரது தூதுத்துவம் அசலானதென நிரூபிக்கும் வகையில் அற்புதச் செயலொன்று கோரப்பட்ட போதெல்லாம் அவர் குர்ஆன் அல்லாஹ்விடம் இருந்து வந்ததென நிரூபிக்க அதன் அமைப்பையும் ஒப்புவமையற்ற சிறப்புத்தன்மையையும் எடுத்துக்காட்-டினார். சொல்வளத்தைப் போற்றிய ஆதிமக்கள் பாராட்டுகளிலேயே தம்மை மறந்து போகக்கூடிய அளவிலான கணீரென்ற ஒலியும் மனோ சக்தி நிறைந்த பூரண நிலையை கொண்டதுமான அதன் மொழி வன்மையைவிட அற்புதமான வேறெதுவும் உண்மையிலேயே முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இல்லை. குறிப்பிடத்தக்க அளவிலான சீர் பிரமாணங்களையும் கவர்ச்சியான சப்த அலைகளையும் கொண்ட அதன் மொழிப்பிரமாணங்களின் அபரிமிதம் பலத்த விரோத மனப்பான்மை கொண்டவர்களையும் அதி சந்தேகமுற்றவர்களையும் கூட மத மாற்றம் செய்வதில் பெரும் பங்கு கொண்டுள்ளது." *(L' enseig nement de I'Arabe au College de France, Locon d' ourerture, April 29, 1909)*

குர்ஆனின் வழிகாட்டல் என்பதன் பூரணத்துவத்தைப்பற்றியும் அதன் வாசகத்தின் அசல் தன்மை பற்றியும் *வோறா வெச்சியா வக்லியெறி* பின்

வருமாறு கூறுகிறார்: "...ஆனால் இந்நூல் அமைப்பிலும் ஒழுங்கு முறையிலும் பூரணத்துவம் வாய்ந்தது மட்டுமன்றி அதன் விடயாம்சத்தின் நிமித்தம் அதே போல் இன்னொன்று உருவாக்குதல் அசாத்தியமான-தென்பதும் வெளிப்படையாயுள்ளது. ஏனெனில், அதில் வேறு விடயங்-களோடு, அது எதிர்காலச் சம்பவங்களுக்கான சாத்தியங்களை அளிப்பதையும் பல நூற்றாண்டுகளாக நடந்தவற்றின் தொடர்புகளைக் கொடுப்பதையும் மக்களால் பொதுவாகக் கவனியாது விடப்படுபவை பற்றிக் கூறுவதையும் விஞ்ஞானங்களைச் சாடையாகக் குறிப்பிடுவ-தையும் நாம் வாசிக்கலாம். மொத்தமாகக் கூறின், மனிதருள் அதிவி-வேகமுள்ளவர்களாலும் மெய்யியலாளருள் மிகச் சிறந்தவர்களாலும் அதிதிறன் மிக்க அரசியல் வாதிகளாலும் ஏற்றுக் கடைபிடிக்கக்கூடிய ஒரு அறிவுக்களஞ்சியம் அதிலுண்டு. ஆனால், குர்ஆனின் இறைத்-தன்மைக்கு இன்னுமொரு நிரூபணம்: அது இறக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரை எவ்வித மாற்றங்களும் ஏற்படாதவாறு பாதுகாக்கப்பட்டுள்-ளது என்பதாகும். அத்தோடு, அல்லாஹ்வின் கிருபையால் அது உலகமுள்ள வரைக்கும் அப்படியே இருக்கும். முஸ்லிம் உலகெங்கும் இந்நூல் மீண்டும் மீண்டும் வாசிக்கப்பட்டாலும் விசுவாசிகளுள் இது எவ்வித சலிப்பையும் உண்டாக்குவதில்லை. மாறாக மீண்டும் மீண்டும் வாசிக்க, வாசிக்க புதுப் புது விளக்கத்தையும், புத்துணர்வையும் அதிக-ரிக்கச் செய்கிறது. அதனை வாசிப்பவர்களிலும், செவிசாய்ப்பவர்களிலும் அது ஆழ்ந்த மரியாதையையும் பணிவச்சத்தையும் உண்டாக்குகிறது. *(Apologie de L` Islamisme, page# 57-59)*

## இலகுவான மார்க்கம்.

இஸ்லாமிய கொள்கைக் கோட்பாடுகள் எத்துணை ஆழமோ அத்து-ணை சிக்கலற்ற தன்மையைக் கொண்டது. அதன் மூல அடிப்படைகள் இரண்டு: -

**அ-ஈமான் (விசுவாசம்) இதற்கு ஆறு நிபந்தனைகள் உள்ளன.**

1.அல்லாஹ்வையும், 2.வானவர்களையும் *(Angels)*, 3.இறை வேதங்க-ளையும், 4.அல்லாஹ்வின் தூதர்களையும், 5.மறுமை நாளையும், 6. நல்லது, தீயது யாவும் ஏற்கனவே அளவிடப்பட்டவை என்பதையும்

உள்ளத்தால் உறுதி கொண்டு விசுவாசம் கொள்ள வேண்டும்.

ஆ- கட்டாயக் கடமைகள். (ஐந்து தூண்கள்)

1.அல்லாஹ்வின் ஒருமையிலும், முஹம்மத் ﷺ அவர்களின் தூதுத்துவத்திலும் விசுவாசம் கொள்ளல். 2.கடமையான தொழுகைகள். 3.சகாத் (ஏழைவரி) 4.கடமையான நோன்பு. 5.புனித மக்கா சென்று ஹஜ் செய்தல்.

இஸ்லாத்தைப்பற்றி விமர்சிக்கும் ஒரு கிறிஸ்தவர் பின்வருமாறு ஒத்துக்கொள்கிறார்: "இஸ்லாம் தனது இறையியலின் எளிதான தன்மையினைக் கொண்டும், தமது மதக் கொள்கையினதும் அடிப்படைத்தத்துவங்களினதும் தெளிவினைக் கொண்டும், அது விதிக்கும் அனுஷ்டானங்கள் கச்சிதமான எண்ணிக்கையைக் கொண்டது என்பதன் மூலமும் மக்களின் ஆன்மாக்களை இலகுவாக வெற்றி கொள்ளும் சக்தியைப் பெற்றிருந்தது. ஆரம்பத்திலிருந்தே தொடர்ந்து மாற்றங்களடைந்து வரும் கிறிஸ்தவ மதத்தை போலல்லாமல் இஸ்லாமோ தன்னுடன் ஒத்ததாகவே இருந்து வந்துள்ளது." *(Jean Lheareax Etude Sur L' Islamisme page : 35 )*

ஆறு நிபந்தனைகளைப் பற்றியும் ஐந்து தூண்களைப்பற்றியும் நன்கு விளங்கிக் கொள்ள விரும்புவோர் மார்க்க மேதை முஹம்மத் அப்துல் அலீம் எழுதிய '*இஸ்லாத்தின் அடிப்படைத்தத்துவங்கள்*' என்ற நூலைப் பார்க்கவும். என்றாலும் இங்கு இந்த ஆறு நிபந்தனைகளும் ஐந்து தூண்களும் 'முதல் மூல அடிப்படைகள்' மாத்திரமே என்றும், இம் மூல அடிப்படையிலிருந்து விரிந்து செல்வதும் குர்ஆனிலும் ஹதீஸிலும் புனிதமாய்ப் பொதிந்து நிற்பதுமான இஸ்லாமிய முழுக் கொள்கைக் கோட்பாடோ மனித வாழ்வின் உடல், ஒழுக்க, சமூக, ஆத்ம அம்சங்களில் தேவையான வழிகாட்டல் முழுவதையும் உள்ளடக்கக் கூடிய பரப்பைக் கொண்டதாகும் என்றும் மட்டுமே குறிப்பிடலாம்.

## இறுதித் தூதர்.

ஒரு நெறி நெறியாக மட்டுமிருந்து மனிதனைச் செயல்பட ஊக்குவிக்க முடியாது. எனவே உலகின் எல்லா மனிதர்களிலும் பொருள்களிலும் மேலாகத் திருத்தூதர் முஹம்மத் ﷺ அவர்களை நேசிப்பதும், மானிடப்பூரணத்துவத்தின் அதியுயர்ந்த சேர்வும் ஏக தலைவரும் கடைசியாக

வந்த இறுதி நபியும் அவரே என்றும், அவரைப் பின்பற்றுதலும் இஸ்லாமிய விசுவாசத்தின் ஒரு முன் நிபந்தனையாகும்.

இதுவே இஸ்லாத்தில் திருத்தூதர் முஹம்மத் ﷺ அவர்களது இறையியல் அந்தஸ்தாகும் அவரது மின்னும் ஆளுமையைப் பொறுத்தவரையிலோ அதனைப் பற்றி குறைந்த அளவில் விபரிக்கக்கூட பல நூற்கள் தேவைப்படும்.

இஸ்லாத்தை ஆராய்ச்சி செய்த மேற்கத்தியவர்களின் சில கூற்றுக்களை இங்கு வாசகர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

பிரபல கீழைத்தேயவியலாளரான *Lane Poole* பின் வருமாறு கூறுகிறரார்: "முஹம்மதின் தோற்றம் கம்பீரமிக்கது; அவரது நிறமும் உருவ அமைப்புக்களும் மிகமிக அழகானவை: கற்பனை, அறிவின் உயர்நிலை, உணர்வின் மென்மையும் பண்பும் என்ற சக்திவாய்ந்த வல்லமைகள் அவருக்கு அருளப்பட்டிருந்தன. 'திரைக்குப் பின்னால் நிற்கும் ஒரு கன்னியை விட அடக்கமுள்ளவர்' என அவரைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது. அவருக்குக் கீழுள்ளோர் மீது மிகவும் இரக்கம் உள்ளவராகவும், அவரது வேலையாள் என்ன செய்தாலும் அவனை ஏசுவதற்கு ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள். அவரது பணியாள் அனஸ், *"நான் பத்து வருடங்களாக திருத்தூதருக்கு ஊழியம் செய்திருக்கிறேன், அவர்கள் என்னைப்பார்த்து 'சீ' என்ற வார்த்தையைக் கூட பிரயோகிக்க வில்லை."** எனக்கூறுகின்றார்கள். அவர் அவரது குடும்பம் மீது ஆழ்ந்த அன்பு கொண்டிருந்தார். சிறார்கள் என்றால் திருத்ததூதர் அவர்களுக்கு அதிக பிரியம்: அவர்களை வழியில் கண்டால் நிறுத்தி தலையைத் தடவி விடுவார்கள். வாழ்க்கையிலேயே அவர் ஒருவரையும் அடித்ததில்லை. சம்பாசணைகளின் போது அவர் உபயோகித்த ஆக கடுமையான வார்த்தை *"அவருக்கு என்ன நேர்ந்து விட்டது? அவரது நெற்றியில் மண் ஒட்டிக்கொள்ளட்டும்"*** என்பதே. ஒரு குழுவினரைச்சபிக்குமாறு அவர் வேண்டப்பட்டபோது, *"கருணையாளனாகவே அன்றி சாபமிடுபவனாக நான் அனுப்பப்படவில்லை"**** என்று பதிலளித்தார்கள். அவர் நோயுற்றவர்களைப்

---

* அஹ்மத் - 12839
** புகாரி - 5571
*** முஸ்லிம் - 4704

பார்க்கச் சென்றார், இராப் போசனத்திற்காக ஒரு அடிமை விடுத்த அழைப்பை ஏற்றார், தமது கிழிந்த ஆடைகளுக்கு தையல் போட்டுக் கொண்டார், ஆடுகளில் பால் கறந்தார், தமது காரியங்களை தாமாகவே செய்து கொண்டார், மற்றவர் கையிலிருந்து தங்கள் கையை ஒரு போதும் முதலில் எடுத்துக் கொள்ளமாட்டார், மற்றவர் திரும்பும் வரை அவர் திரும்பமாட்டார்' என பிறிதொரு அறிவிப்பில் காணமுடிகிறது.

அவர் பாதுகாப்பளித்தவர்களுக்கு அவரே மிக விசுவாசமிக்க பாதுகா-வலராக இருந்ததோடு, உரையாடலில் அவரே மிகவும் இனிமையும் உடன்பாடும் உள்ளவராவார். அவரைக் கண்டவர்கள் திடீரென அவர்பால் ஈர்ந்து கொள்ளப்பட்டனர், அவர் அருகே வந்தவர்களெல்லாம் அவர் மீது நேசம் கொண்டனர், அவரைப்பற்றி விவரித்தவர்கள் "முன்னரோ பின்ன-ரோ அவரைப் போல் ஒருவரை நான் கண்டதில்லை" எனக் கூறுவர். அவர் அதிகமாகப் பேசுபவரல்ல. ஆனால் அவர் பேசிய போதெல்லாம் உறுதியுடனும் நிதானத்துடனுமே பேசினார்.

ஒன்றுடன் ஒன்றாக சேற்றில் சேர்த்து சாந்து பூசப்பட்ட ஈச்சமர ஓலைகளினாலான, ஒன்றிலிருந்து இன்னொன்று பிரிக்கப்பட்ட எளிய குடிசைகள் வரிசையில் அவர் தன் மனைவியருடன் வாழ்ந்தார். அவர் அடுப்பு மூட்டுவார், தரையைக் கூட்டுவார்: அவரிடமிருந்த சொற்ப உணவு கூட அதில் பங்குகொள்ள வருபவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்-படும். உண்மையிலேயே அவரது தயாளத் தன்மையைக் கொண்டு வாழ்ந்த பல ஏழைகள் உபயோகித்து வந்த ஒரு வாங்கு அல்லது வாங்-குகளைக் கொண்ட தாழ்வாரம் அவரது வீட்டுக்கு முன்னால் காணப்-பட்டது. இவ்வாங்குகளிலேயே ஜீவியம் நடத்தியவர்கள் 'வாங்கின்(திண்-ணைத் தோழர்கள்) மக்கள்' என அழைக்கப்பட்டனர். அவர் நன்கு விரும்பிய போகப் பொருட்கள். சாதாரண உணவான பேரீச்சம் பழமும் தேனுமாகும், அவர் அரேபியாவின் ஆட்சியாளரான காலத்தில் கூட பாலைவனத்தின் உணவே அவருக்கு இணக்கமானதாகக் காணப்பட்டது. அவரில் மிருதுவான தன்மையும் அதே நேரத்தில் வீரமும் காணப்படு-கிறது. இவ்வாறான தன்மை உண்டாக்கும் அன்பு உணர்ச்சியும் பயபக்தியும் எமது சீர்த்தூக்கிப் பார்க்கும் சக்தியை நாமறியாமலேயே பாதிக்கலாம் என்ற அபாயத்தை விளைவிக்கலாம். பல வருடங்களாக

தனது மக்களின் வெறுப்பினை தனியாக எதிர்த்து நின்ற அவரே தான் இன்னொருவர் கைகுலுக்கலினால் பற்றிய தமது கையை முதலில் மீட்காதவர்: தமது கருணைக் கண்களால் குழந்தைகளைப்பார்த்து புன்முறுவல் செய்து அன்புடன் சிரித்து கதைத்துச் சிறார் கூட்டங்களை தாண்டிச் செல்லும் அந்த பிள்ளைகளின் நேசரும் அவரேதான். அவரது கபடமற்ற சிநேக பாவமும், உயரிய தாராளத்தன்மையும் திடமான தைரியமும் நம்பிக்கையும் அவரைப்பற்றிய விமர்சனங்களை பாராட்டாக மாற்றிவிடும்.

'ஆர்வம் உலக மக்களை நல்லோராக்கும்; மனிதன் உயிருடன் இருக்கும் போதே அழிந்து போகாது அவனைப் பாதுகாக்கும்' இக்கருத்தில் அவர் ஒரு ஆர்வமுள்ளவர், அனேகமாக ஆர்வம் உதவாத செயல் நோக்கங்களுடன் இணைக்கப்படுவதனாலும் பலனளிக்காத தரையில் விழுந்த பழம் பலன் தராது போவதனாலும் ஆர்வம் அனேகமாக வன்மமாக பாவிக்கப்படும். முஹம்மதைப் பொறுத்தவரை அது அப்படியிருக்கவில்லை. உலகை பிரகாசிக்கச் செய்ய தேவைப்பட்ட போதெல்லாம் அவர் ஆர்வமிக்கவரானார்; அவருடைய ஆர்வமும் உயரிய செயல் நோக்கத்திற்காக உயரிய சிறப்புள்ளதாயிருந்தது. தமது வாழ்க்கை மூலத்தை ஒரு பெரும் உண்மையாக்கி உன்னத ஆனந்தத்தை எய்திக் கொண்ட சந்தோசமிக்க ஒரு சிலரில் அவரும் ஒருவரே. அவர் ஒரே இறைவனின் தூதுவர்: அவரது வாழ்க்கையின் இறுதிவரையும் தான் யார் என்பதையோ, தங்களது வாழ்வின் சாராம்சமான தூதையோ ஒரு போதும் மறக்கவில்லை. அவரது உயரிய பதவியின் தன்மையை உணர்ந்து கொள்வதனால் தோன்றும் கம்பீரத்துடன் அவர் தங்களது தூதினை போதித்தார்" *(Speeshes and Table Talk of the Prophet Muhammad, xxviii-xxx)* முகவுரை.

பேராசிரியர் *Professor Nathanier Schmidt* கூறுகிறார்: "முஹம்மதுடைய தன்மையின் அடிப்படையான நேர்மையினைச் சந்தேகிக்கவே முடியாது. எந்த விடயத்தையும் பிறர் விமர்சனம், பழிப்புக்களுக்கு அஞ்சி மூடி மறைக்காமல் உறுதி, துணிவுடன் உரிய அத்தாட்சிகளுடன் எடுத்து வைக்கும் ஆற்றல் கொண்டவர். உண்மையை மட்டுமே தேடும் இவ்வாறான வரலாற்று விமர்சனம் அவரையும், அவரது இவ்வுலக

அனுபவங்கள் எப்படி இருந்தாலும், பல்வேறு விதங்களில் எச்சரித்து போதித்து நெறி வழுவாத உயர்ந்த கருத்துக்களை வெளியிட்ட தூதர்களின் வரிசையில், அவர்கள் நடைமுறையில் இருந்ததாகக் கண்ட நடத்தை ஒழுங்குகளை விட மேன்மையான வற்றை ஏற்படுத்திய தூதுவர்களின் வரிசையில், தங்களுள் ஒரு சக்தியின் இயக்கத்தின் காரணமாக தடுக்க முடியாத விதத்தில் உந்தப்பட்டு தமது உன்னதமான கடமைக்கே தம்மை அச்சமின்றி அர்ப்பணித்துக் கொண்ட தூதுவர்களின் வரிசையில் வந்த ஒருவர் என்ற அவரது பாத்தியதையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.'' *(The new International ensyclopaedia Book xvi, page:72)*

திருத்தூதர் முஹம்மத் ﷺ அவர்களது பிரச்சாரம் கண்ட மகத்தான வெற்றியைப்பற்றி குறிப்பிடுகையில் *Carlyle* பின் வருமாறு கூறுகிறார்: "அரேபிய மக்களுக்கு இஸ்லாம் என்பது இருளிலிருந்து ஒளிக்குள் பிறந்ததாகும். அரேபியாவிற்கு முதன் முதலில் உயிர் வந்தது இஸ்லாத்தினாலாகும். உலகம் படைக்கப்பட்ட நாளிலிருந்து கவனிப்பாரற்று பாலைவனத்தில் அலைந்து திரிந்த ஒரு வறுமையான இடையர் கூட்டம் அவர்கள்; அவர்கள் நம்பத்தக்க ஒரு தூதையும், அத்தூதைக் கொண்டு கவனிப்பாரற்றவை உலக பிரசித்தி பெறுவதையும், சிறியது உலகத்திலேயே மகத்தானதாவதையும் அவர்கள் காணக்கூடிய ஒரு தூதையும் தாங்கி வந்தவொரு வீரத்தூதுவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஒரு நூற்றாண்டாவதற்குள் அரேபியா ஒரு பக்கத்தில் கிறாணடாவையும் மறுபக்கத்தில் தில்லியையும் தனது சக்தியின் பராக்கிரமத்துடனும் மகிமையுடனும் பிரகாசத்துடனும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருக்கிறது. உலகின் பெரும் பகுதியில் பல சகாப்தங்களாக அரேபிய ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. இவ்வராபியரும், அம்மனிதர் முஹம்மதும் அந்த ஒரு நூற்றாண்டும் – கறுத்து கவனிக்கப்படாது காணப்பட்ட மண்ணின் மேல் விழுந்த ஒரேயொரு நெருப்புப் பொறியாக இல்லையா? ஆனாலோ, அம்மண் வெடி மருந்தாக மாறி தில்லியிலிருந்து கிறானடா வரை விண்ணலாவ சுவாலை விட்டெறிகிறதே!'' *(Heroes and hero- Worship: `Hero as Prophet`)* என்ற அத்தியாயம்.

திருத்தூதருடைய தூதின் உள்ளார்ந்த பலத்தைப்பற்றி அரை நூற்றாண்டுகளுக்கு முன் ஓ. ஹூதா என்ற பிரான்சிய ஆராய்ச்சியாளர் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "இதே போன்று வேகத்துடன் வேறு எந்த மார்க்கமும் வளர்ச்சியடைந்ததில்லை. அரை நூற்றாண்டுக்குள் இஸ்லாம் இந்து நதிக்கரையிலிருந்து அத்திலாந்திக் கரை வரை பரவியது. பதின்மூன்று நூற்றாண்டுகளுக்குப்பின் இவ்வளர்ச்சியின் வேகம் குன்றிய போதும், ஓரளவாயினும் இன்னும் நடைபெற்றுக் கொண்டுதானிக்கிறது. இந்தியாவிலும் சீனாவிலும் மலாயாவிலும் இஸ்லாம் ஊடுருவிப்பரவிய பிறகு அதன் வெற்றி நடையை ஆபிரிக்க கண்டத்தில் தொடர்கிறது. இன்னும் சிறிது காலத்தில் அக்கண்டமும் முற்றாக இஸ்லாமாகி விடும். விசேட பிரச்சாரகர்கள் இல்லாமலும் ஆயுத பலத்தினை நாடாதும் முஹம்மதின் மார்க்கம் இருண்ட கண்டத்தை மதமாற்றம் செய்துள்ளது. அத்தோடு இஸ்லாமிய கோட்பாடுகளை ஏற்று அவற்றை பரப்ப எத்தனிப்புகள் செய்துள்ள சிறிய வெள்ளையர் கூட்டங்கள் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் உள்ளது என்பதை ஆச்சரியத்துடன் சுட்டிக்காட்டாமலிருக்கவும் முடியாது. இன்று வெளிப்படையாக தென்படாதிருக்கும் ஐரோப்பிய மதமாற்ற இயக்கம் நிச்சயமாக வளரும்; *(La Grande Encyclopaedie Book 20, Islamisme)* என்ற கட்டுரை

## இறை நேசம்.

இறை நாட்டத்திற்கு எதிராக இயங்க உண்மையிலேயே முடியாத நிலையை ஒருவன் அடையும் வரை இறை நேசத்தை வளர்ப்பதும், அதில் மூழ்கிப் போவதும், அந்நேசத்தின் இனிய பரவசத்தால் இதயம் நிரம்பி விடுவதுமே இறுதி நோக்கம். இது சாந்தி, சமாதானம், பூரணத்துவம் ஆகியன நிறைந்த நிரந்தர வாழ்வை ஒரு முஸ்லிமுக்கு அளிக்கும்.

# உள்ளே

எண — பக்கம்

1. ஏகத்துவம் ..... 02
2. அல்லாஹ்வுக்கு அடிபணிதல் ..... 08
3. இஸ்லாமும் இயற்கையும் ..... 08
4. இஸ்லாமும் ஒழுக்க நெறியும் ..... 08
5. சத்தியத்தின் மார்க்கம் ..... 09
6. இஸ்லாமும் நன்னடத்தையும் ..... 09
7. இஸ்லாமும் அழகும் ..... 10
8. இஸ்லாமும் விவேக அறிவும் ..... 11
9. இஸ்லாமும் மூடநம்பிக்கையும் ..... 11
10. இஸ்லாமும் செயற்பாடும் ..... 12
11. இஸ்லாமும் சீரான வளர்ச்சியும் ..... 12
12. இஸ்லாமும் விஞ்ஞானமும் ..... 12
13. இஸ்லாமும் உழைப்பும் ..... 16
14. இஸ்லாமும் ஒழுக்கநெறியும் ..... 16
15. இஸ்லாமும் சமாதானமும் ..... 17
16. இஸ்லாமும் ஜிஹாதும் ..... 17
17. இஸ்லாத்தில் வற்புறுத்தலில்லை ..... 19
18. இஸ்லாமும் சகோதரத்துவமும் ..... 19
19. இஸ்லாமும் புரோகிதமும் ..... 20
20. இஸ்லாமும் மானிட கௌரவமும் ..... 21
21. இஸ்லாம் கூறும் பலதாரமும், பாலியலும் ..... 23
22. மீட்சிக்குரிய மார்க்கம் ..... 26
23. அசலான வேத நூலைக் கொண்ட மார்க்கம் ..... 27
24. இலகுவான மார்க்கம் ..... 28
25. இறுதித் தூதர் ..... 29
26. இறை நேசம் ..... 34
27. உள்ளடக்கம் ..... 35